
padippakam

# ஏலையா

கலை,இலக்கிய,சமூக,பொருளாதார விஞ்ஞான
மாத இதழ்





அனைவரும் ஒருங்கிணைந்து சுதந்திரமானதும் அமைதியானதுமான எதிர்காலத்தை நோக்கி
GEMEINSAM FÜR FREIHEITLICHE UND FRIEDLICHE ZUKUNFT

ஆனி,ஆடி,
ஆவணி,புரட்டாதி
1997

இதழ்:114,115,116,117

குற்றமில்லாத நெஞ்சம்தான் எப்போதும்
அச்சமில்லாமல் இருக்கும்

படிப்பகம்

padippakam



முதல் கரும்புலி
கப்டன் மில்லர்

# காவல் தெய்வங்கள்

**கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தை காணும் அற்புதமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.**

தமிழீழத் தேசியத் தலைவர்
வேலுப்பிள்ளை பிரபாகரன்

படிப்பகம்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் -அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி 1997



கலை, இலக்கிய, சமூக, பொருளாதார, விஞ்ஞான மாத இதழ்.

**ஒபகௌசன் தமிழர் ஒன்றியம்**

உலகம் போற்றும் தலைவனுண்டு வருகவே -எங்கள்
உரிமை மீட்க உங்கள் பங்கைத் தருகவே
விலகியோடல் வீரமல்ல அறிகவே -உங்கள்
வீரம் எதிரி காண வேண்டும் எழுகவே

எழுகவே தமிழரே எழுகவே
புலிகளின் அணியிலே வருகவே

கவிஞர். புதுவை. இரத்தினதுரை

padippakam

தாயவள் விலங்குடைக்க தன்னுயிர் ஈய்ந்திட்ட
தற்கொடையாளர் நீங்களன்றோ
தமிழீழ காவல் தெய்வம்

ஏலையா 114,115,116.117

# நமது கருத்து

காலத்துக்குக் காலம் இலங்கையரசு தமிழர் பிரச்சனைக்குத் தீர்வாக வேடிக்கையான, கோமாளித்தனமான தீர்வுகளை வெளியிட்டு எம்மை வாய்விட்டு சிரிக்க வைத்து தனது இயலாமையைக் காட்டி வருகின்றது.

இத்தகு கோமாளித்தனமான செயல்பாடுகளில் ஒன்றாக தீர்வை பொதிக்குள் வைத்து உலகிற்கு அறிமுகம் செய்திருக்கின்றது. கனதியான பொதிதானோ என்று எல்லோரும் எண்ணுவார்கள் என எண்ணிய இலங்கையரசு எமமை ஏமாற்ற பொதியொன்றைச் சுமந்து வந்திருக்கின்றது.

எம்மக்கள் இனி ஒரு போதும் ஏமாற மாட்டார்கள். தமிழீழம் என்பதே முடிந்த முடிவு என்பதை தமிழீழத் தேசியப் படையான தமிமீழ விடுதலைப் புலிகளும், எம்மக்களும் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டார்கள். அயல் நர்டான சிங்கள தேசத்தின் இராணுவ ஆக்கிரமப்புககு எதிராகவும், போர் தொடுத்தலுக்கு எதிராகவுமே தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த்துப் போரிட்டு வருகின்றார்கள்.

முடிந்த முடிவு தமிழீழத் தனிநர்டு. ஒன்றுமில்லாத ஒன்றுக்கு பொய்யென்று பெயரிட்டு எம்மக்களை, ஏமாற்றலாம் என்று எண்ணி தன்னை சிரிப்புக்கு இடமாக்கிக் கொண்டிருக்கும் இலங்கை அரசு தனது அறளை பிடித்த சிந்தனைகளை ஒதுக்கி வைத்து தமிழீழம், சிங்கள தேசம் இரண்டுக்குமான எல்லைகளை வகுத்துக் கொள்ள தமிழீழ தேசியப்படையான விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்துவதே அதிசிறந்த வழியாகும்.

—ஏலையா



படிப்பகம்

padippakam

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் — அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு*

ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி 1997

# கரும்புலிகள்

Black Tigers என்பது தற்கொடைப்பிரிவைச் சேர்ந்தவர்களை குறிப்பதாக விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கொள்ளப்படுகிறது. இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எல்லோருமே தம்முடைய அரிய உயிரை இலட்சியத்திற்காக துறப்பதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றனர். இயக்க உறுப்பினர்கள் அனைவருமே சைனைட் குப்பிகளை கழுத்தில் அணிந்து கொண்டு இருப்பார்கள். மிக இக்கட்டான சூழ்நிலையில் எதிரிகளிடம் பிடிபடாமலும் இயக்கத்தை பாதிப்படையவிடாமலும் செய்ய உயிர் துறந்தவர்கள் எத்தனையோ பேர்.

ஆனாலும் கரும்புலிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் நேரடியாகவே தமது உயிரைப் பணயம் வைத்து, அதைவிட தமது உயிரைக் கொடுத்து சில நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். அரிதாக, மிக அரிதாக அவர்கள் தப்பி திரும்பி வரும் சந்தர்ப்பங்களும் உண்டு. எப்படியிருந்தபோதிலும் அவர்கள் நடவடிக்கையில் இறங்கும்போது தம்முடைய உயிரை அந்த நடவடிக்கைக்காக தியாகம் செய்யத் தயாராகவே இருப்பர். இப்படியாக விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தற்கொடைத் தாக்குதலில் முதல் வீரச்சாவடைந்த கப்டன் மில்லரால் நடத்தி முடிக்கப்பட்ட தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை பற்றி சற்றுப் பார்ப்போம்.

மில்லர் வடமராட்சியின் துன்னாலைப் பகுதியை பிறப்பிடமாகக் கொண்டவன். அவனுடைய தந்தை இலங்கை வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். தன்னுடைய தாயகத்தை மீட்க இராணுவத்தின் அடக்கு முறைக்கெதிராகப் போரிடத் தன்னுயிரைக் கொடுக்க அவன் எப்போதும் சித்தமாக இருந்தான். மில்லர் எமது இயக்கத்தில் சேர்ந்து பல தடவைகள் இராணுவத்துடன் மோதியிருக்கிறான். ஒவ்வொரு மோதலிலும் மில்லர் தன்னுடைய பணியை தனக்கே உரித்தான அபாரத் துணிச்சலுடன் செய்து பலருடைய மதிப்பைப் பெற்றவன்.

> கமல் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவன். இவரது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டெடுக்க சரியான தீர்வாகாது என்பதை உணர்ந்த கமல், எமது இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு போராடத் தொடங்கினான்.

வடமராட்சிப் பகுதியை சிறீலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டபோது பிரபாவின் அணியினரோடு சேர்ந்து பதில்த் தாக்குதலில் ஈடுபட்டான். வடமராட்சி யுத்தம் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பலத்த சேதத்திற்கு பின் இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டனர். வடமராட்சிப் பகுதியை திரும்ப மீட்க வேண்டும் என்பதில் மில்லர் துடியாய்த் துடித்தான்.

பிரபாவும், (பிரபா முன்னர் மன்னார்ப் பிராந்தியத்தில் விக்டருடன் பணியாற்றியவன்) மில்லரும் சேர்ந்து நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வெடிமருந்து வாகனங்களை விடுவதற்கு தலைவரிடம் அனுமதி கேட்டு, வெடி மருந்தையும் பெற்றுக்கொண்டனர். ஒன்றன் பின் ஒன்றாக இரு வண்டிகள் விடுவதற்கு திட்டமிட்டனர். முதலாவது வண்டியை மில்லரும் அதன் பின் இரண்டாவது வண்டியை ராசிக்கும் ஓட்டிச் செல்ல முன் வந்தனர்.

திட்டம் உருவானது. இரவு இரவாக நெல்லியடி இராணுவ முகாமுக்குள் வண்டிகளை விடுவது என்றும் ஏனென்றால் இராணுவத்தினர் இரவு 10 மணிக்குப் பின்னர் முகாம்களை விட்டு வெளியே வந்து சுற்றாடலில் இருந்து மக்கள் வெளியேறிய வீடுகளில் தங்கிவிடுவார்கள் என்பதால், அதற்கு


படிப்பகம்

padippakam



## ஏலையா 114,115,116 ,117

முன்னர் வெடி மருந்து நிரப்பப்பட்ட வாகனங்கள் உள்ளே விடப்படல் வேண்டும். வாகனங்கள் முகாமை நெருங்கிச் செல்லும் பாதைகளில் பல தடைகள் போடப்பட்டு இருந்தன. எனவே வாகனங்கள் புறப்பட்டு முகாமை அடைவதற்கு அத்தடைகள் அகற்றப்படுதல் முக்கியமானதாகும். அந்த வேலையை கமல் பொறுப்பெடுத்துக்கொண்டான். பகல் வேளையே வாகனங்கள் தயார் செய்யப்பட்டு முகாமுக்கு அண்மையில் கொண்டு வரப்பட்டு இருக்கும். சரியான நேரம் நெருங்கியதும் எம்தோழர்கள் முகாமைத் தம்முடைய துப்பாக்கிகளாலும், றொகட்டுகளாலும் தாக்கத் தொடங்குவார்கள்.

அந்த சந்தர்ப்பத்தில் கமலும் அவனுடைய சகாக்களும் தெருவில் உள்ள தடைகளை அகற்றுவார்கள். கமல் தடைகளை முற்றாக அகற்றிய பின் பிரபாவுக்கு அறிவிக்க வெடிமருந்து நிரம்பிய வாகனங்கள் முகாமைச் சென்றடையும்.

இது தான் திட்டம்.

கமல் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவன். இவரது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டெடுக்க சரியான தீர்வாகாது என்பதை உணர்ந்த கமல், எமது இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு போராடத் தொடங்கினான். பயிற்சியை முடித்துவிட்டு மட்டக்களப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றியிருந்தான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக்கூடியது.

மட்டக்களப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித் திறமையினால் எத்தனையோ அரும் பெரும் காரியங்களை ஆற்றியிருக்கின்றான். இவன் அங்கு பணியாற்றிய காலத்தில் ஒரு பெண்ணைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பெண்ணுடைய வீட்டுக்கு கமல் செல்வது வழக்கம். ஆரம்ப காலங்களில் நாட்டின் விடுதலைக்காக தன் உயிரைப் பணயம் வைத்து கமல் பணியாற்றியது கமலின் பால் அந்தப் பெண்ணின் கவனத்தை ஈர்த்தது. கமல் வீட்டுக்கு போகும் சமயங்களில் எல்லாம் அன்பாக உபசரித்து கமலுக்கு ஆதரவளித்து , அன்பு செலுத்தினாள் . நாட்கள் நகர நகர இருவரும் அன்பால் இறுகப் பிணைக்கப்பட்டனர். ஒருவரை ஒருவர் மனமார நேசித்தனர். உலக வழக்கப்படி கூறினால் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டிருந்தனர். அப்பெண் கமலின் உயிர் வாழ்வுக்காக எப்போதும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள். ஆனால் ஒருபோதும் கமலின் தீவிரமான போராட்டத்துக்கு தடையாக இருந்ததில்லை.

மட்டக்களப்பில் இருந்து கமல் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையிலே நெல்லியடி முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்ற முன்வந்தான்.

---

பேசும் முன்னால் கவனமாகக் கேள்
எழுதும் முன்னால் நீ யோசிக்கத் தவறாதே
செலவழிக்கும் முன்னால் நீ சம்பாதிக்கப் பார்
பிறரை விமர்சிக்கும் முன்னால் உன்னை எண்ணிப்
பார். பிரார்த்தனைக்கு முன்னால் மாற்றாரை
மன்னித்துவிடு.

—ரொபர்ட் கால்டுவெல்

---



படிப்பகம்

padippakam



மேஜர் கமல்



முதல் நாள் கமலும், திலீபனும் ஒன்றாக இருந்த வேளையிலே திலீபனிடம் ஓர் வேண்டுதல் விடுத்தான் கமல். "நான் சிலவேளை இத்தாக்குதலில் சாவடைந்தால் என்னை நேசிப்பவளுக்கு அதை உடனடியாக தெரிவித்து விடு" என்பதாகும். என்ன சத்தியமான வார்த்தைகள். ஏதோ தன் இறப்பைத் தானே அறிந்து வைத்திருந்தது போல் கூறியிருக்கின்றான்.

தாக்குதல் நடவடிக்கைகள் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தான். இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருந்த நெல்லியடிப் பகுதிக்கு வெடிமருந்துகளையும், வாகனங் களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாகக் கொண்டு வந்து சேர்த்தான். அவ்வேளைகளில்கூட தான் அடுத்த நாள் இறக்கப்போகின்றேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்து கொள்ளவில்லை. கவலையோ திகைப்போ அல்லது பயமோ, தயக்கமோ எதையுமே அவனிடத்தில் காண முடியவில்லை. வெடி மருந்துகளை ட்ரக் வாகனங்களில் ஏற்றி, அவற்றுக்கு இணைப்புகளைக் கொடுத்து தன்னுடைய சவப்பெட்டியைத் தானே தயாரித்துக் கொண்டிருந்தான். அன்று பகல் முழுவதும் வெடி மருந்துடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. நேரம் இரவாகிய போது குழுக்கள் முகாமை நோக்கி முன்னேறத் தொடங்கின. மில்லர் தன்னுடைய வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கி செல்ல வேண்டிய பாதையில் போடப்பட்டு இருந்த தடைகள் உள்ள பகுதியை சென்றடைந்தனர். ஏனைய குழுக்களும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

பொறுப்பாளரிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எல்லோரும் முகாமை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். மில்லர் ஏறி அமர்ந்திருந்து ட்ரக் வண்டியை ஸ்ராட் செய்து எஞ்சினை உறுமிவிட்டு அமைதிப்படுத்தினான். பின் தன் வண்டியை செலுத்துவதற்கான உத்தரவுக்காக காத்திருந்தான். அப்போது கூட பக்கத்தில் இருந்த பிரபாவோடு ஏதோ 'யோக்' அடித்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருக்கையிலேயே கமல் குறுக்கே பாய்ந்து தடைகளை அகற்ற முயன்றான். பெரிய மரக்கட்டைகள் புதைக்கப்பட்டிருந்தன. தான் கொண்டு வந்த வெடி மருந்துப் பெட்டியை கட்டைகளின் பின் வைத்துவிட்டு விலகி மறைவில் படுத்துக்கொண்டான். வெடி மருந்து வெடித்தது. அத்தோடு கட்டைகள் தூக்கி எறியப்பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப்பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவத்தினரின் மெசின்கன்கள் வெடிக்கத் தொடங்கியது.

கமல் தன்னுடைய வாக்கிடோக்கியில் அறிவித்தான். "தடைகள் அகற்றப்பட்டு விட்டது. ஆனால் புதிய சிக்கல் பாதைக்கு நேரேயுள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச் சூடு வருகின்றது. ஏற்றுப்பொறு".

மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் வாக்கியிலும் அறிவிப்பு தெளிவாகக் கேட்டது. அதைக் கேட்ட மில்லர்,



படிப்பகம்

padippakam

தாயவள் விலங்குடைக்க தன்னுயிர் ஈய்ந்திட்ட
தற்கொடையாளர் நீங்களன்றோ
தமிழீழ காவல் தெய்வம்

## ஏலையா 114,115,116,117

"பிரபா பரவாயில்லை, வாகனத்தின் முற்பகுதியில் குண்டுகள் துளைக்காத படி தகடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் நான் கொண்டு போய் சேர்த்து விடுவேன்" என்றான்.

"மில்லர் சற்றுப் பொறுத்துக் கொள் அந்த 'பங்கர்' உடைக்கப்பட்டதும் நீ செல்லலாம். மிக விரைவாக வண்டியைச் செலுத்தி வண்டியை விட்டு விட்டு நீ இறங்கி ஓடி வந்துவிடு" என்றான் பிரபா.

மில்லர் ஒரு முறை சிரித்துக் கொண்டான். ஏனென்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபா வுக்கு ஏனென்று கேட்க மனம் துணியவில்லை.

"பிரபா! முன்பு ஒரு முறை யாழ்ப்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாக செல்லவில்லை. எனவே இம்முறை நான் மிக நிதானமாகவே வாகனத்தை செலுத்துவேன். எப்படியும் கட்டிடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தைக் கொண்டு செல்வேன்" என்று மில்லர் கூறினான்.

கமல் தன்னுடைய வோக்கியில் ரொக்கட் லோஞ்சர் (R.P.G) வைத்திருந்தவனை அந்த காப் பரணை உடைக்குமாறு கூற ரொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட ரொக்கட் பங்கரைத் தாக்கியது. மணல் மூட்டைகள் சிந்தின. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும், கமல் தகவலைத் தெரிவித்தான். பொறுப்பாளரிடமிருந்து மில்லரை புறப்படுமாறு பிரபாவுக்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை 'ஸ்ராட்' செய்து மெதுவாகச் செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான்.

வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத் தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான். கருவி இயங்கத் தொடங்கி விட்டது. மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான். பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்து ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து, "மில்லர் எப்படியும் திரும்பி வந்துவிடு" என்று கூற அதை மில்லர் புரிந்துகொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண் டிருக்க மில்லரையும் வெடி மருந்தையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது.

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்த தோழர்கள் முகாமைவிட்டு 100 யார் பின்னுக்கு வந்தனர். கமல் நின்ற இடத்தை தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்து விட்டு பின்னுக்கு செல்ல, சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது.

தோழர்கள் மீண்டும் முகாமை நோக்கி முன்னேறினார்கள். இராணுவத்தினர் தங்கியிருந்த சற்று முன்னர் கூட இராணுவத்தினர் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்த மிகப்பெரிய மாடிக் கட்டிடம் தரைமட்டமாகிக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத்தினர் கட்டிடத்தின் உள்ளேயே இறந்து போனார்கள்.

மில்லரின் தாக்குதலைத் தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில் கமலும் வீரச்சாவடைந்தான். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எடுத்து வரப்பட்டது. ஆனால் மில்லர் திரும்பவே இல்லை. மில்லர் வெடிமருந்தின் அதிர்வலைகளோடு சங்கமமாகி அதிர்வலையோடு சேர்ந்து தன் பணியை செவ்வனே முடித்தான்.

நன்றி: உயிராயுதம் பாகம் 1



படிப்பகம்

padippakam

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்—அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி 1997

# தமிழ்மீதான பண்பாட்டுப் படையெடுப்புகள்

நன்றி: பேராசிரியர். க. ப. அறவாணன்

ஏறத்தாழ வட இந்தியா முழுவதும் ஆரியத்தாலும் ஆரியக் கலப்பினத்தாலும் நிரம்பியது. காலப் போக்கில் இந்தக் கலப்பினம் தென்னிந்தியா நோக்கியும் அடியெடுத்து வைத்தது. அன்று தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரை மக்கள் இடப் பெயர்ச்சிக்குப் பெருவழியாக இருந்ததில்லை. மேற்குக் கடற்கரையே வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியா நோக்கிவரும் ஆரியக் கலப்பினங்களுக்கு அருஞ் சாலையாக அமைந்திருந்தது. இன்றைய கேரளமும் அன்றைய சேர நாடும் ஆகிய மலையாள நாடு வட இந்திய ஆரிய வரவுக்கு முதல் பாய் விரித்தது. பிற்காலத்தில், 1498-இல் வாசுகோடகாமாவுக்கும் பாய் விரித்தது.

சேர நாடு நம்பூதிரி வசமாயிற்று. நம்பூதிரி வசம் ஆனதால்தான், அது காலப் போக்கில் தமிழகத்தில் இருந்து பிரிந்து கேரளம் ஆயிற்று. கேரளத்தைத் தோற்றுவித்தவர் பரசுராமன் என்ற வழக்கும், அப்பரசுராமன் ஆரிய வர்ணத்தவன் என்பதும் இதனை உறுதி செய்கின்றன. கேரளாவில் உள்ளூர் நாயரும் ஊருக்கு வந்த நம்பூதிரியும் கலந்து வாழ்ந்தமையால் கலப்பினமே உருவாயிற்று. இதனை மானுட இயல் செய்திகளும் உறுதிப்படுத்தும்.

1. சான்றாக: நம்பூதிரிப் பிராமணக் குடும்பங்களுள் மூத்த ஆண்பிள்ளை மட்டுமே நம்பூதிரிப் பிராமணப் பெண்களைத் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இளைய ஆண் மக்கள்



படிப்பகம்

padippakam



உள்ளூர் நாயர் குடும்பத்திலேயே பெண் எடுக்க வற்புறுத்தப்பட்டு அது வழக்கமாகவும்பின்பற்றப்பட்டது.

2. நம்பூதிரிப் பிராமணரை மணம் முடிக்காமல், வேறு நாயர் ஆண்களை மணம் முடித்த நாயர் குலப்பெண் முதல் மூன்று நாள் தன் மாப்பிள்ளையுடன் உடல் உறவு கொள்ளாமல் தடுக்கப்பட்டதுடன், நம்பூதிரியோடு மூன்று நாள் உடல் உறவு கொள்ளுவது வழக்கமாக ஆக்கப்பட்டது. இவ்விரண்டு சான்றுகளும் தென்னிந்தியத் திராவிடர்களுடன் ஆரியர் கொண்டிருந்த உடற் கலப்பை உறுதி செய்யும்.

அர்ச்சுனன் வட இந்தியாவில் வாழ்ந்த பஞ்ச பாண்டவர்களுள் ஒருவன். இவன் தமிழ் நாட்டில் தலைமை நாடாக இருந்த பாண்டிநாட்டு இளவரசி சித்ராங்கதையை மணந்து கொண்டான் என்ற நிகழ்ச்சி எண்ணத் தக்கது. அன்றியும் பிராமண ஆண், தனக்குக் கீழான இனப் பெண்களுடன் உடல் உறவு கொள்ளுவது தடுக்கப்படவில்லை. அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் அனுலோமரீ என்று பிராமணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டனர். பிராமணர் சூத்திரப் பெண்களை மணக்கக் கூடாது என்ற தடை இருந்தது. ஆனால், பராசர ஸ்மிருதி இதனையும் அனுமதிக்கிறது. தமிழர் திருமணங்களோடு பிராமணர்கள் புரோகிதராகத் தலைமை இடம் பெற்றிருந்தது மானிட இயல் பார்வையில் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. திருமணத்தைப் புரோகிதரே அமைத்தார் என்ற கருத்தும் அண்மைக் காலம் வரை பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் தாலியைப் புரோகிதரே கட்டி முடித்து வந்தார் என்பதும் மனங்கொளத் தக்கவை. கோயில்களில் திருவிழாக்கள் நிகழும் போது விழா நாட்களில் யாருடனும் உடலுறவு கொள்ள அக்காலத்துக் கோயில் தாசியர் ஒரு காலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். கோயில்களில் அண்மைக் காலம் வரை இளம் பெண்கள் தேவதாசியராகக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். கோயில்கள் சிவாச்சாரியார் கையகத்து இருந்து வந்தன. சிவாச்சாரியார் குலத்துப் பிறந்த சுந்தரர் திருவாரூர் தியாகேசப் பெருமான் கோயிலில் தேவதாசியாக இருந்த பரவை நாச்சியாரைக் காதலித்த நிகழ்ச்சியும் இங்கே இணைத்து எண்ணத் தக்கது.

எனவே தென்னிந்தியாவிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் கூட உடல் வழிப்பட்ட தனி இனம் என்று சுட்டுமளவிற்குத் தூய இனம் அமைந்தது இல்லை. உலகம் முழுதுமே கலப்பினம்தான்; தூய



படிப்பகம்

padippakam



இனம் என்பது ஆய்வுரையே தவிர வாழ்வுரையுமன்று; வாய்மையுரையுமன்று.

இன வெறுப்பிற்குரிய காரணங்கள்

உடலியல் வேறுபாட்டைக் கொண்டு, மனிதனை உடலியல் அடிப்படையில் வேறுபடுத்தலாம். ஆனால் அவ்வேறுபாட்டை மனிதத் தரம், பண்பாடு ஆகியவற்றை அளக்கும் அளவு கோலாகக் கொள்ளக் கூடாது. மானுட இயலார் பலர் இதனையே வற்புறுத்தி வந்திருக்கின்றனர். யுனெஸ்கோ ஆதரவில் பாரீசு நகரில் கூடிய அறிவியல் அறிஞர்களும் 1964-இலிலும் 1967-இலிலும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்* இவ்வறிக்கையின் படி சமூக நடைமுறை வாழ்க்கையில் இனம் என்பது ஓர் உயிரியல் கருத்து என்பதை விட ஒரு சமூகப் புனைந்துரை கதை (A Social Myth) என்பது பொருந்தும். இன்று வாழும் உலக மாந்தர் அனைவரும் ஓரே மூல மாந்தர் குழுவைச் சார்ந்தவர். கோமோ சேப்பியன்சு (Homosapiens- அறிவு உள்ள மனிதர்) என்ற ஒரே மூல மனித வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் இனம் பற்றிய இவ்வுண்மையான கருத்து இரண்டாம் போருக்கு முன்பு வரை, போதிய அளவுக்குப் பரவவில்லை. வெள்ளை நிறத்தாரும் மஞ்சள் நிறத்தாரும் மற்ற இன மக்களை விட உயர்ந்தவர் என்றே கருதிக் கொண்டு வந்தனர். இன்றும் கூடத் தென்னாப்பிரிக்காவில் குடியேறி ஆளும் வெள்ளையர் இதே எண்ணத்தைக் கொண்டுள்ளனர். சீனரும் இதே கருத்தினர் தாம். இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் கூடச் சாதி அடிப்படையில் இந்தக் கருத்து இன்றும் நிலவி வருகிறது. ஆங்கிலம், இந்தி மொழி அறிந்தோர், அம்மொழியறியா மக்களைத் தாழ்வாக எண்ணும் போக்கும் உள்ளது.

1. இன உயர்வுக் கொள்கை (Ethno centrism)

பண்டைய கிரேக்கர், கிரேக்கர் அல்லாதாரைப் 'பார்பாரியன்' (Barbarians), அதாவது காட்டுமிராண்டி என்றழைத்தனர். (Bar - Bar என்றால் பொருளில்லாத மொழியில் பேசுநர் என்பதே ஆதி கிரரேக்கப் பொருள்). எகிப்தியரும், ரோமரும் தம்மை ஏனைய நிலமக்களை விட உயர்ந்தோர் என்றே கூறி வந்தனர். சீனர்கள், தம் நாட்டை ட்ருங் கூயா - மைய அரசு என்றே கருதி வந்தனர். உலகத்திற்கே தம் நாடு மையநாடு என்பது அன்னோர் கருத்து. ஐரோப்பிய மதத் தொண்டர்கள், சீனாவுக்கு முதலில் வந்த போது, அவர்களை 'அயல்நாட்டுப் பிசாசுக்கள்' என்றே சீனர் குறித்தனன. (தமிழரோ வெள்ளைத்துரைமார், என்று ஐரோப்பியரையும், பண்டு



படிப்பகம்

padippakam



வந்த காகேசியரை ஆர்ய (உயர்ந்தோர்) என்றும் போற்றியமை ஒப்பிட்டு நோக்கி வெட்கப்படுவோமாக). சீனர் முதலான மங்கோலிய இனத்தவர், ஐரோப்பாவிற்கும் வட அமெரிக்காவிற்கும் சென்றபோது, வெள்ளைக்காரர்களாய் சரிந்த ஆண்களும், விநோதப் பழக்கங்களும் உடைய கேலிக்கும் ஐயத்திற்கும் உரிய மக்கள் என்று குறைவாக மதிக்கப்பெற்றனர். தமிழர், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றபோது, கூலி, குற்றவாளி, கொடியர் (தாய்லாந்து மொழி வழக்கு) என்றே சுட்டப்பட்டனர். தொடக்கத்தில் அமெரிக்காவில் குடியேறி வாழ்ந்த ஐரோப்பியரை ஸ்பானிஷ் நாட்டினர் 'ஆத்மா இல்லாத மாந்தர்' என்று கருதி ஒதுக்கினர்.

பிரஞ்சு எழுத்தாளர் ஜோசப் காபினோ, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒரு பெரும் கட்டுரை எழுதினார். இனங்களிடையே ஏற்றத் தாழ்வு (Essay on the inequality of Races) என்பது அதன்பெயர். காபினோவை உலகில் இனவேறுபாடுகளுக்கு வித்திட்டவர். இந்தியாவிற்கு நாகரிகத்தையும் சமஸ்கிருத மொழியையும் அறிமுகப்படுத்தியோரும், பண்டைய கிரேக்கம், ரோமாபுரி நாடுகளில் நாகரிகங்களை நிலை நாட்டியோரும் ஆரியரே என்று வாதாடினார்.

ஆரியர், வெள்ளை நிறத் தோல், உயரமான தோற்றம், இளம் பழுப்பு நிற மயிர், நீல வண்ணக் கண்கள் உடைய தூய இனத்தவர் என்று வருணித்தார். வெள்ளையர் -ஆரியர் - காகேசியர் - உயர்ந்தவர் என்ற சமன்பாட்டால் உலகில் விளைந்த கொடுமைகள் கொஞ்சமல்ல. ஜெர்மனி நாஜி இயக்கமும், உலகமெங்கும் செமிதிக் இனத்தவரான யூதர் படுகொலை செய்யப் பெற்றதும், இந்தியாவில் நூற்றுக்கணக்கான ஆண்டு வந்த / வரும் சாதிப்பிரிவுகரளும் எண்ணனில் அடங்காதவை. 1967வரை உலக அமைப்பான ஐ.நா. கலப்புத்திருமணத்தை ஏற்கவில்லை; தமிழகத்திலும் அண்ணா வரும்வரை கலப்புத்திருமணம் சட்டப்பூர்வமாக்கப் படவில்லை. அமெரிக்காவில் 1967க்கு முன் ஒரு நீதிபதி வெள்ளையர்க்கும் கறுப்பர்க்கும் இடையே நடந்த கலப்பு மணத்தை எதிர்த்து அவர் வழங்கி தீர்ப்பு வாசகம் வருமாறு :

> சர்வ வல்லமையுள்ள கடவுள், வெள்ளையர், கறுப்பர், மஞ்சள், மலாய், சிவப்பு முதலான இனத்தவரைப் படைத்து, அவர்களைத் தனித்தனிக் கண்டங்களில் வாழ வைத்துள்ளார். கடவுளுடைய இந்த ஏற்பாட்டை மீறுவதைத் தவிர, இப்படிப்பட்ட கலப்புத் திருமணத்திற்கு வேறு காரணங்கள் இருக்க முடியாது.*



படிப்பகம்

padippakam



இனவழி ஏற்றத்தாழ்வு அறிவு பூர்வமானது அன்று; அறிவயல் அடிப்படை வாய்ந்ததும் அன்று என்பதை உயிரியப் அடிப்படையில், பெனடிக்ட், வெல்ட்பிஷ் (The Races of mankinng) எல். சி. டன் (Race and Biology) ஆகிய அறிஞர்கள் ஆராய்ச்சிச் சான்றுகளுடன் நிறுவியுள்ளனர்.

ஏதேனும் ஒன்றிரண்டு கூறுகளால் நிற உறுப்பு வேறுபாடுகளைப் பெற்றிருக்கும் மேலாண்மைக் குழுக்கள் தம்மை மட்டும் உயர்த்திச் சொல்லுவர். அதன் எதிர்ப்பாடாக ஏனைய இனக் குழு மக்களைத் தாழ்த்திச் சொல்லுவர். இஃது இன வேறுபாட்டிற்கு ஒரு முதன்மைக் காரணமாகும். இன்றும் இது உலகின் பல இடங்களிலும் இந்தியாவிலும் கொடிகட்டிப் பறக்கிறது. சீன அரசர் சியன்லால் 1973 இல் இங்கிலாந்து அரசன் மூன்றாம் சார்சுக்குச் சீன மக்களின் உயர்வையும் ஏனைய மக்களின் தாழ்வையும், அதுவும் குறிப்பாக இங்கிலாந்து மக்களின் தாழ்வையும் சுட்டிக் காட்டி எழுதிய கடிதத்தைஇதற்குச்சான்றாகச்சொல்லலாம்.

"பல கடல்களுக்கு அப்பால் வாழும் அரசனே; எங்களது நாகரிகத்தின் தன்மையையும் பயனையும் பெற விரும்பி உனது நினைவாக ஒரு தூதுக் குழுவை எனது நாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளீர். எங்களுடைய தெய்வீகப் பேரரசிடம் நீ கொண்டுள்ள பக்தி எங்களது நாகரிகத்தை அடைய உன்னைத் தூண்டுகிறது. ஆனால் எங்களுடைய சடங்குகளும் நெறிமுறைகளும் உங்களுடையவற்றி லிருந்து மிகுதியாக வேறுபடுகின்றன. ஆதலால் தூதுக்குழு எங்கள் நாகரிகத்தின் சிற்சில பகுதிகளைக் கற்றுக் கொண்டாலும் அயல் நாட்டில் எங்கள் வழக்கங்களை உங்களால் ஏற்படுத்த முடியாது. எங்கள் பேரரசின் பெரிய பேறுகள் எல்லாம் உலகிலுள்ள எல்லா நாட்டிலும் சென்று சேர்ந்திருக்கின்றன. எல்லா நாட்டு அரசர்களும் அதற்குரிய மதிப்பையும் வணக்கத்தையும் எங்களுக்குத் தரையின் மூலமாகவும் கடலின் மூலமாகவும் அனுப்பி வைக்கின்றனர். நாங்கள் எல்லாப் பொருளையும் பெற்றிருக்கிறோம் என்பதை உங்கள் தூதுவரே நேரில் அறிவார். உங்கள் நாட்டுச் செய்தொழில் பொருட்கள் எங்களுக்கு எவ்வகைப் பயனையும் அளிக்க மாட்டா. ஏனெனில் நுட்பமான புதிய பொருட்களை நான் பெரியனவாகமதிப்பதில்லை."

சீனர்களைப் போன்றே உயர்வு மனப்பான்மை ஐரோப்பிய வெள்ளையர்களிடமும் இருந்தது. இந்திய உயர் சாதியினரிடமும்

padippakam



இருந்தது. தற்போது இம் மனப்பான்மையில் தொய்வு ஏற்பட்டிருக்கிறதே தவிர இன்னும் தொலைந்து போய்விடவில்லை.

2. பொருளாதார மேன்மை

ஒருசில மனித இனக் குழுக்கள் வரலாற்றுக் காரணங்களால் பெரும்பான்மை மக்களின் அறியாமையினால் மரபு உரிமைகளால் அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் உயர்நிலையை அடைந்திருந்தன. இக் குழுக்கள் ஆளும் குழுக்களாகவோ அல்லது ஆளுவோர்க்குத் துணையிருக்கும் குழுக்களாகவோ தொடர்ந்து இருநது வந்தமையால் பொருளாதாரத்தில் உயர் நிலையில் இருந்து வந்தன. பொருளாதார உயர் நிலையைக் கொண்டே சமூகத்திலும் உயர் நிலையை நிலைப் படுத்திக் கொண்டன. இக் குழுக்கள் ஏனைய மக்களுக்குக் குறைவான ஊதியத்தை அளித்துப் பொருளாதாரத்தைப் பின்னடையச் செய்தன. பொருளாதாரத்தில் நலிந்த இம் மக்கள் மேலே வளரா வண்ணம் உயர் குழுவினர் பார்த்துக் கொண்டனர். இதற்கு மதமும், விதி போன்ற மதக் கொள்கைகளும் பெரிதும் துணையாக இருந்தன. கிரேக்கத்திலும், உரோமிலும் இந்தப் பின்னணியிலேயே அடிமைகள் உருவாக்கப்பட்டனர். இந்தியாவிலும் அடிமை முறை இருந்தது. வேத காலத்தில் தசயூக்கள் (தாசர்) என்ற அடிமைகள் இருந்தனர். தமிழ் நாட்டிலும் அடிமைகள் இருந்தனர். அடியோர் என்ற பெயரிடும் உயர்ந்தோர், மேலோர் என்ற பெயரீடுகளும் இதனை மறைமுகமாக எடுத்துரைக்கின்றன.[2]

3. அரசியல் நல்வாய்ப்புகள்

தங்களுடைய அரசியல் தலைமையையும் அதிகாரத்தையும் நிலை நிறுத்திக் கொள்ள உயர் குழுக்கள் இன வெறுப்பைத் திட்டமிட்டுப்பரப்பும். தென்னாப்பிரிக்காவிலும் ,தென்னமெரிக்கா விலும், ஏன் வட அமெரிக்காவிலும் கூட இவ்வின வெறுப்பு பெரிதாகப் பரப்பப் பட்டிருக்கிறது. இலங்கை அதிபர் செயவர்த்தனா தாம் சார்ந்த சிங்கள இனம் உயரியதான ஆரிய இனம் என்றும், இந்திராகாந்தியும் ஆரிய இனம் என்றும், தமிழர்கள் திராவிட இனம் என்றும் பிரித்துக் காட்டிப் பேசிய செய்தி இங்கே இணைத்துக் காட்டி நினைக்கத் தக்கது. ஐரோப்பியர், தாம் குடியேறி ஆண்ட நாடுகளில், ஆண்ட நாள்களில், உள்நாட்டு மக்கள் ஆளும் தகுதி இல்லாதவர் என்ற கருத்தைப் பரப்பினர்; உள்ளூர்ப் பொதுமக்களையும் நம்ப வைத்தனர்.



படிப்பகம்

padippakam



4. மனமுறிவை ஈடு செய்வது

வெற்றி வாய்ப்பை இழந்த அந்த இழப்பால் ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையை வேறு சில இனக் குழுவின் மேல் சார்த்துவது, பொய்யாகப் பழி சுமத்துவது, அபாண்டமாகப் பழித்துரைப்பது ஆகியன இன வேறுபாட்டையும் இன வெறுப்பையும் நிலைப்படுத்துவன ஆகும். முதல் உலகப் போரில் தோல்வியுற்ற செருமானியர் தோல்விக்குரிய பழி அனைத்தையும் யூதர்கள் தலையில் கட்டினர். சிலப்பதிகாரம் காட்டும் பாண்டியர் வரலாற்றில் நெடுஞ்செழியன் செய்த பிழையைப் பொற்கொல்லர் தலைமேல் சுமத்தியது இங்கு எண்ணத்தக்கது. உலகின் பல இடங்களில் ஆங்காங்கே வாழும் சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்மை இன மக்களால் இப்படிப் பழிக்கு ஆளாக்கப்பட்டதுண்டு.

5. அறியாமை

இன வெறுப்புகளை ஏற்படுத்துவதில் தலையாய பொறுப்பு அறியாமைக்கு உண்டு. பிற இன மக்களைப் பற்றிப் பொய்யாகத் தாழ்வான செய்திகளை ஓயாமல் பரப்புவது, எழுதுவது, பேசுவது, தொடர்புச்சாதனங்களால்விளம்பரப்படுத்துவதுஆகியவற்றின்மூலம் ஒரு குழு மக்களைப் பற்றிய தப்பு எண்ணங்களை ஏனைய இன மக்களிடம் பரப்பி விட முடியும். சப்பானியர்களைப் பற்றியும் செருமானியர்களைப் பற்றியும் ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் இரண்டு போர்களை யொட்டி விளம்பரப்படுத்திய செய்திகள். செருமானிய நாசிக் கட்சியினர் இட்லரின் விளம்பர அமைச்சரும் இலக்கியத்தில் டாக்டர் பட்டம் பெற்றவருமான கோயபல்சைக் கொண்டு பொதுவாக ஏனைய இன மக்களைப் பற்றியும் குறிப்பாக யூத இன மக்களைப் பற்றியும் கொடுமையான பொய்ப்பிரச்சாரங்கள் செய்து இன வெறுப்பை வளர்த்தனர். ஆப்பிரகாம் லிங்கன் காலம் வரை அமெரிக்க வெள்ளையரிடம் பரவியிருந்த-பரப்பப்பட்டிருந்த ஆப்பிரிக்க நீக்ரோக்களைப் பற்றிய இன வெறுப்பும் அறியாமையில் உருவாக்கப்பட்டதே. இன்றும் கூட ஐரோப்பாவில் காலனி ஆட்சிக் காலத்தில் காலனி ஆட்சியின் காரணமாகக் குடியேறிய ஆப்பிரிக்கர்களைப் பற்றியும் ஆசியர்களைப் பற்றியும் தவறான எண்ணங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றன (இந்த நூலாசிரியர்க்குப் (1978) பாரிசில் பிரஞ்சுப் பயிற்றுவித்த பிரஞ்சுப் பேராசிரியை தற்போது பாரிசில் குற்றங்கள் பெருகுவதற்குக் காரணம் பிரஞ்சு ஆப்பிரிக்காவில் குடியேறி இருக்கும் ஆப்பிரிக்க நீக்ரோக்களே என்று வாதிட்டார்). சிங்கப்பூர் மலேசிய நாடுகளில் சீனர்களைப் பற்றி உயர்ந்த எண்ணமும் தமிழர்களைப் பற்றித்



படிப்பகம்

padippakam



தாழ்ந்த எண்ணமும் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து வேலைக்கு ஆட்கள் வருவதைத் தடைசெய்த சிங்கப்பூர் அரசாங்கம் மலேசியா இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து வரும் சீனர்களை வரவேற்பதை இதற்கு எடுத்துக்காட்டாகக்கூறலாம்.

ஓர் இன மக்களைப் பற்றிய தவறான ஓர் எண்ணத்தை உண்டாக்கிக் கொண்டு அதே இனத்தைச் சார்ந்த தனி மனிதர் மேலும் ஏற்றிக் கூறுவதையும், அதனால் ஏற்படும் இன வெறுப்பையும் இங்கே சுட்டிக் காட்டலாம். தில்லி முதலான வட இந்தியப் பகுதிகளில் தென்னிந்தியர்களை மதராசி என்று அழைப்பதும், மதராசிகள் நன்கு பொய் சொல்லுவார்கள் என்று பரப்பி இருப்பதும் அவர்கள் மிகச் சாதுவானவர்கள் இணக்கமாகப் போகிறவர்கள் (People of adjustments) என்ற கருத்து - எண்ணம் உண்டாக்கி இருப்பதும் கருதத்தக்கன. இவ்வாறே சீக்கியர்கள் அறியாத அப்பாவிகள்-சிரிப்பிற்குரியவர்களாக (Sardarji joke) வட இந்தியாவில் உருவங் கொடுக்கப்பட்டுள்ளனர். சீனர்களைப் பாம்பைத் தின்பவர்கள் என்றும், இத்தாலியர்கள் பாட்டுப் பாடிச் சோம்பித் திரிபவர்கள் என்றும், ஸ்காட்லாந்தினர் கருமிகள் என்றும், பரவியுள்ள தப்பெண்ணங்களை இங்கே சுட்டலாம். இத் தப்பெண்ணங்கள் கால வெள்ளத்தில் கரைந்து போகலாம்; எனினும் ஓர் இன மக்களைப் பற்றிய அறிவையும் பண்பையும் சிறு (பொய்) வாய்பாட்டில் அடைத்துவிடுவதன் மூலம் மெய்ம்மையைக் கண்டறியும் நேரமும் முயற்சியும் குறைக்கப்படுகின்றன. புதிய தலைமுறையினரும் புதிதாக வரும் அயல் இனத்தினரும் ஓர் இனத்தைப் பற்றித் தப்பெண்ணங்களையும் வெறுப்புகளையும் மனத்தில் எளிதாகக் கொள்ள இவை ஏதுவாக அமைகின்றன. அன்றியும் இப்பழக்கம் நம்மைப் பொய்மையாக உயர்த்தி எண்ணுவதற்கும் காரணமாகிறது. சான்றாகத் தற்காலத் தமிழர்கள் தங்களது கடந்த காலப் பெருமைகளைத் தற்போதைய இனப் பெருமைகளாகப் பொய்யாக மதிப்பிட்டு ஏனையோரைத் தாழ்வாக மதிப்பீடு செய்வதையும் அதில் ஏமாந்து போவதையும் சுட்டிக் காட்டலாம்.

6. போலி அறிவியல் வாதம்

ஓர் இனம், வேறு இனங்களைப் பற்றிப் பரப்ப நினைக்கும் தப்பெண்ணங்களை நிலை நிறுத்தப் போலி அறிவியல் சான்றுகளைக் காட்டுவர். வெள்ளை அமெரிக்கரால், நீக்ரோ அமெரிக்கர் அறிவிலும் பண்பிலும் தாழ்ந்தவராகப் புள்ளி விவரங்கள் மூலம் காட்டப்பட்டனர். ஐரோப்பியக் குழுக்களில்



படிப்பகம்

padippakam



நடத்தப்பட்ட அறிவியல் சோதனைகள், வட ஐரோப்பியர்களை மட்டும் உயர்வாகக் காட்டின. பிரிட்டிசு தீவினர், செர்மானியர், ஒல்லாந்தர் ஆகியோர் உயர்ந்தவர் என்றும், ஏனையோர் தாழ்ந்தவர் என்றும் காட்டப்பட்டனர். இத்தாலியர், போலந்து நாட்டினர், நடு நிலக்கடல் நாட்டுப் பகுதியினர் தாழ்வாகக் காட்டப் பட்டனர். இந்தியாவில் கூட ஒடுக்கப்பட்டவர்கள் பின்தங்கியவர்கள் கல்வி நிலை, பணிநிலை பற்றிய புள்ளி விவரங்கள் அம் மக்களைத் தாழ்வாகக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

7. மொழி

இனப் பிரிவிற்கு அடிப்படையான உயிரியல் காரணம் ஒழிந்து வருகிறது. வண்ணமும், உடல் அங்க அமைப்புகளும், எவ்வாறு உயர்வு தாழ்விற்குக் காரணங்களாக அமைந்தனவோ, அதனைப் போலவே மொழியும், இன வேறுபாட்டின் அடையாளமாகவும் பல வளரும் நாடுகளில் அமைந்து விட்டது. இது காலனி ஆட்சியின் விளைவுகளுள் ஒன்று. சிற்சில இடங்களில் மொழியே, இனத்தை வரையறுக்கும் கூறாக அமைந்து விட்டது. பல நாடுகளை அரசியல் நாட்டு எல்லைகள் கூறுபடுத்துகின்றன; மொழிகளே தனி நாடுகள் ஆக்கியுள்ளன. நாட்டு எல்லைகளை மதப் பின்பற்றுதல் சில இடங்களில் தீர்மானித்தது; சில இடங்களில் அரசியல் வெற்றிகள் தீர்மானித்தன. சில இடங்களில் இனப் பிரிவுகள் தீர்மானித்தன. தற்போது மொழிகளும் பல இடங்களில் தீர்மானிக்கின்றன. செர்மனிய மொழி செர்மனிய நாடு. (செர்மனிய அரசியல் சித்தாந்தங்கள் இரண்டாக்கியிருந்தன. கொரியாவை, வியட்நாமை, தைவானை அரசியல் சித்தாந்தம் இரண்டாக்கியிருந்தது) மனித குல அரசியலில், சித்தாந்த அடிப்படைப் பிரிவினையே முடிவானதாக இருக்கும்.

காலனி ஆட்சிகளில், ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் இன வழி எல்லைகள் வீழ்த்தப் பெற்றன. சான்று: அராபிய இன நாடுகள், நீக்ரோ இன நாடுகள்.

மத வழி எல்லைகள் வீழ்த்தப் பெற்றன. சான்று: இசுலாமிய, இந்து இந்தியத் துணைக் கண்டம், மரபுமதம், இசுலாமிய மதங்களில் கீழ் இருந்த ஆப்பிரிக்கக் கண்டம், புத்த மதம், இசுலாமிய மதங்களின் கீழே இருந்த தென் கிழக்கு ஆசிய நாடுகள்.

மொழி வழி எல்லைகளும் வீழ்த்தப் பெற்றன. சான்று: இந்தியாவிலும், இலங்கையிலும் மொழி வழித் தனியாட்சி கொண்டிருந்த பல நாடுகள்.



படிப்பகம்

padippakam



நில வழி எல்லைகளும் வீழ்த்தப் பட்டன. சான்று மலைகளும் ஆறுகளும் இந்தியா போன்ற நாடுகளில் நாட்டெல்லைகளாக இருந்த நிலை மாற்றப்பட்டு அவற்றை மீறி ஒரு நாடாக்கப்பட்டன.

இனம், மதம், மொழி, நிலம் என மனிதக் கூட்டங்களைத் தனித் தனியாகப் பிரித்திருந்த பண்டைய பிரிவுகள் வீழ்த்தப்பட்டு, அரசியல் அதிகாரம் (Political Supremacy) என்பதன் கீழ் பல இனங்கள், மதங்கள், மொழிகள் ஆகியன உள்ளடக்கப்பட்டன. இவை பெரும்பாலும் ஐரோப்பிய-காக்கேசிய-வெள்ளையர் மேலாண்மைப பூமிகளாக அடிமைப் படுத்தப்பட்டன. கிட்டதட்ட உலகம் முழுதுமே (மங்கோலிய, நீக்ரோய்த் இன மக்கள் அனைவருமே) தூய காக்கேசிய இனப் பேராதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

இதனால், புதிய இனவழிக் கொள்கை தோற்றம் எடுத்தது. பழைய இன ஆதிக்கக் கோட்பாடு, புதிய அடிப்படைகளின் கீழ்,க், புதிய இன ஆதிக்கக் கோட்பாட்டை உலகம் எங்கும் உருவாக்கியது. வெள்ளை இனமே சிறந்தது; வெள்ளை இன மக்களே சிறந்தவர்; வெள்ளை இன மக்களின் பண்பாடே சிறந்தது; வெள்ளை இன மக்களின் நாகரிகமே சிறந்தது; வெள்ளை இன மக்களின் பழக்க வழக்கங்களே சிறந்தவை; வெள்ளை இன மக்களின் உணவு முறையே சிறந்தது; வெள்ளை இன மக்களின் உடை முறையே சிறந்தது; வெள்ளை இன மக்களின் பொருளே சிறந்தது.

இந்த மனப்போக்கின் தாயர் ஐரோப்பியர் தாம். இந்த ஒருவிதப் பொய் இனத்தலைமையை அந்தந்த வட்டாரத் தேசிய மக்களையே ஏற்க வைத்து விட்டனர். முன்பும் இன்றும் தங்கள் ஏழ்மைக்குக் காரணம், மேல் நாட்டு மக்களின் அரசியல், பொருளாதார, சமூகக் காரணங்களே என்பதைக் காண இயலாமல் கருத்துக் குருடாகி, தம் வறுமைக்குத் தம் முன்வினைகளே காரணம் என்று நம்பும் பாமர மக்களின் மன நிலைமையை ஒப்பிடலாம். தம்மைச் சார்ந்த மொழி முதலான அனைத்துமே தாழ்ந்தவை என்று இந்த மக்களே நம்புகின்றனர்; வாதிடுகின்றனர்.

இப்படி எளிதாக அதுவும் குறிப்பாகத் தமிழர் நம்புவதற்குத் தலைமைக் காரணம், தொன்மைக் காலந் தொட்டுத் தொடரும் அடிமைப் போக்கே! களப்பிரர், பல்லவர் காலம் தொடங்கி (1700 ஆண்டுகள்) அண்மைக்காலம் வரை, தமிழர் சமற்கிருதத்தைத் தேவ பாஷை என்று கருத வைக்கப்பட்டனர்; தம் தமிழ் மொழி 'நீச



படிப்பகம்

padippakam



பாஷை' என்று நம்ப வைக்கப்பட்டனர், சமற்கிருத மொழிக்குரியோர் தேவர்கள் என்றும், தமிழ் மொழிக்குரிய தாம் நீசர்கள் என்றும் இவரே ஒத்துக் கொள்ள வைக்கப்பட்டனர். இந்தத் தேவ நிலையை ஏற்றுக் கொண்ட தமிழர், அடுத்தடுத்து ஆட்சியில் இருந்த உருது, தெலுங்கு, மகாராட்டிரம் முதலான மொழிகளுக்கும் தேவத் தன்மை கொடுத்தனர். இந்த இடத்தில், ஆட்சி வழி ஆங்கிலம் குடியேறிய போது அப்படியே அதனையும் எதிர்க்காமல் ஏற்றுக் கொண்டனர்; தற்போது, அதே இடத்தில் வேறொரு மொழியையும் ஏற்க அணியமாக இருக்கின்றனர். சுமைகளைச் சுமந்தே பழக்கப்பட்டுப்போன ஒட்டகத்திற்குச் சிறு சுமையை அகற்றினாலும் பயணம் தொடராது என்பது போலவே தமிழர், மொழிச் சுமையை இழக்க ஆயத்தமாக இல்லை. அழுக்கேறி நெடுங்காலம் குளிக்காமல் இருக்கும் ஒருவருக்கு அழுக்கே தோலாகத் தெரிதலைப் போலத் தமிழர் உடம்பில், பல்லாண்டுகளாக ஏறிய வேறு வேறு இனப் பண்பாட்டு மேலாண்மைகள் வேறாகப் பிரிக்க முடியாமல் ஒண்டி ஒட்டிக் கொண்டு விட்டன.

யுனெசுகோ கருத்தரங்கு, வளரும் நாடுகளில், வளர்ந்த நாடுகள் செய்து வரும் பண்பாட்டு ஆதிக்கத்தைப் பண்பாட்டுப் படையெடுப்பு (Cultural invasions) என்று குறிப்பிடுகிறது. பழைய காலனி அரசு ஆதிக்கம் இன்றில்லை. ஆனால், காலனி நாடுகளின் பொருளாதார ஆதிக்கங்கள் கிட்டத்தட்ட அப்படியே உள்ளன. தம் பொருளாதார மேலாண்மையை அந் நாடுகள் நேர்முகமாகச் செலுத்தாமல், பல்வேறு மறைமுக வழிகளில் செலுத்தி வருகின்றன. அவையே பண்பாட்டுப் படையெடுப்புகள் எனப் பெறும்.

'கால்கேட்'* என்ற ஆங்கிலக் கம்பெனி ஆலங்குச்சி வழிப் பல் துலக்கிக் கொண்டிருந்த மக்களைப் பிளாசுடிக் பல் குச்சியால், பற்பசையால் பல் துலக்க வைத்து விட்டது. இட்டலி, தோசையில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களை ரொட்டி வழி உணவினராக மாற்றி விட்டது; வேட்டியில் இருந்த மக்களை ஜீன்சு வழி ஆக்கிவிட்டது. உள்நாட்டு செப்பு வெண்கலப் பாத்திரங்கள் விடை பெற, ஆங்கிலக் கம்பெனிகளின் பிளாசுடிக் பொருள்கள் இடம் பிடித்து விட்டன. இப்படிப் பலப் பல.

**மொழி மாந்தன் நினைப்பவற்றை மற்றவர்க்கு எடுத்துச் சொல்லும் ஒரு தொடர்புக் கருவியே, அதற்குமேல் மொழிக்கு முதன்மை கொடுப்பது பேதைமை என்று பலர் எழுதுகின்றனர்; பேசுகின்றனர். ஆனால் ஆழ்ந்து நோக்கின் தமிழர் போன்ற**



படிப்பகம்

padippakam


நூற்றாண்டுகளாகத் தாய்மொழிக் கல்வியறிவு கூட இல்லாமல் ஒடுங்கிக் கிடக்கும் மக்கள் சமூகத்திற்கு மொழி ஒரு தொடர்புக் கருவி மட்டுமன்று; அதற்கும் மேலான உடைமை-உயிர் என்பது புலப்படும். வரப்பில் நின்று வயலில் வேலை செய்யும் உழவனைப் பார்க்கும் முதலாளிக்கு உழவனின் கையிலுள்ள மண்வெட்டி ஒரு கருவியாகத்தான் புலப்படும். ஆனால் அந்த உழவனுக்கு மண்வெட்டி வெறும் கருவி மட்டுமன்று; அதுவே அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் சோறு போடும் கடவுள். அவன் பார்வையில் மண்வெட்டி ஒரு கடவுள்தான்.

1947 வாக்கில் கிட்டத்தட்ட நூறு விழுக்காடு பிராமணர் அல்லாத மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர். அவர்களுக்கு அவர்தம் தாய்மொழியாகிய தமிழில் பேச மட்டும்தான் தெரியும். அதனால் அவர்கள் எந்த அரசாங்க அல்லது தனியார் நிருவாகத்துடனும் நேர்த் தொடர்பு கொள்ள முடியாது. தொடர்பு கொள்ள வேண்டுமானால் ஆங்கிலம் வழியாகத்தான் முடியும். அதற்காக ஆங்கிலம் படித்த ஒருவன் முன் ஒரு தந்தியைப் படிக்கக் கூட இயலாமல் கைகட்டி நிற்பான். அவர் உழைப்பை-அவர் உழைப்பால் தின்று கொழுத்து வாழும் ஆங்கிலம் படித்த வர்க்கம் அவனைச் செருக்கோடு நோக்கும். அவன் தாழ்ந்து குனிந்து நிற்பான்.

அவன் பிள்ளைகள் முதன் முதலாகப் பள்ளிக்குச் செல்ல நேருகையில் பிள்ளை வீட்டில் பேசிய மொழியைப் பள்ளியில் பேச முடியாது; பேசக் கூடாது. ஆக அடுத்துவரும் தலைமுறையும் ஆங்கிலம் தெரிந்த கூட்டத்திற்கு முன் தாழ்ந்து நின்றது.

அந்த அப்பாவி மக்கள் கடவுளிடம் முறையிடக் கோயிலுக்குச் சென்றார்கள். சென்றவர்கள் வெளியே நிறுத்தப்பட்டனர். அர்ச்சனைக்குரிய காசுகளைக் கொடுத்துவிட்டுக் கைகட்டி, வாய்புதைத்து நின்றனர் அம்மக்கள். கடவுள் முன்பு ஏதேதோ முணுமுணுக்கப்பட்டது. அந்த மொழியும் அவனுக்குத் தெரியாது. அனைத்துக்கும் அப்பாற்பட்ட ஆண்டவனிடம் கூடத் தனக்குத் தெரிந்த மொழியால் அவனால் வழிபட முடியாது. ஆகக் கோயிலிலும் தாழ்ந்த நிலை.

அவன் வீட்டில் அவனுடைய பிள்ளைகளுக்கு அவன் செலவில் திருமணம் நிகழும்போது கூடச் சொந்த மொழியில் மண நிகழ்ச்சியை நடத்த அவனால் முடியாது. அங்கேயும் வேற்றுமொழி ஆதிக்கம்.



படிப்பகம்

padippakam



மணநிகழ்ச்சி மட்டுமன்று. பிண நிகழ்ச்சியில் கூட அவன் அறிந்த தாய்மொழிக்கு இடமில்லை. இறந்த முன்னோர் திதியன்றும், திவசம் அன்றும் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் அயல்மொழி ஆதிக்கம்.

வங்கிக்குச்சென்றால்அங்கே;இரயில்நிலையத்திற்குச்சென்றால் அங்கே; அஞ்சலகத்திற்குச் சென்றால் அங்கே; அரசாங்க அலுவலகங்கள் எங்குச் சென்றாலும் அங்கே என எங்கெங்குப் பார்க்கிலும் வேற்றுமொழி ஆதிக்கம் தமிழனைத் தன் மொழி பற்றிய நிலையானதாழ்மைஉணர்ச்சிகொள்ளச்செய்துவிட்டது.

சுதந்திரத்திற்குப் பின்பு இந்த நிலைகள் மாறும்; ஆங்கில ஆதிக்கமொழி இருந்த இடத்தில் தாய்மொழி தமிழ் இடம் பெறும்; அவனும் அவன் பிள்ளைகளும் எளிதாக அவர்கள் மொழியில் பேசி, படித்து, எழுதி அலுவல் பார்த்து முன்னேறலாம் என்று அவனுக்கு அன்றைய அரசியல் கட்சியால் நம்பிக்கை ஊட்டப்பட்டது. ஆனால் அந்த நம்பிக்கையும் ஒரு முழு மோசடி என்பது சுதந்திரத்திற்குப் பின் தெளிவாகி விட்டது. ஆளும் பீடங்களிலிருந்து ஆங்கிலம் அகற்றப்பட்டமை, அகற்றப்பட்டுக் கொண்டு வருகின்றமை என்னவோ உண்மைதான். ஆனால் ஆங்கிலத்தின் இடத்தில் இவனுக்குச் சுதந்திரத்திற்கு முன்பு சொல்லப்பட்டது போல அவன் நம்பிக்கிடந்தது போல அவனுடைய தாய்மொழியாகிய தமிழ் இடம் பெறவில்லை. அதற்கு முற்றும் மறுதலையாக, இந்தி பீடம் ஏற்றப்படுவதை அவன் கண்டான்; கண்டுகொண்டிருக்கிறான். ஒரு மொழி ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த நிலைமை விரிந்து இந்தி என்ற இரண்டாவது மொழிக்கும் அவன் சுதந்திரம் பெற்ற பின் அடிமைப்பட நேர்ந்தது தான் அவன் தன் இலட்சணம். எனவே, ஏற்கனவே மொழி வழி அடிமைப்பட்டுத் தாழ்வுணர்ச்சிக்கு ஆட்பட்ட அவன் மேலும் நம்பிக்கை இழந்து மேலும் ஒரு மொழிக்கு அடிமையாக ஆயத்தம் ஆகி விட்டான்.

தாய்மொழி தமிழால் என்ன பயன்? வேலை கொடுக்குமா? கொடுக்காது. வேறு மாநிலத்தில் வேலை பெற முடியுமா? முடியாது. வெளிநாடுகளில் வேலை பெற இயலுமா? இயலாது. உள்ளூர் நீதிமன்றத்தில் அவன் மொழி செல்லுபடியாகுமா? ஆகாது. நடுவணரசு அலுவலகத்தில் தமிழ்மொழி வழி அவன் தொடர்பு கொள்ள முடியுமா? முடியாது. கோயிலுக்குப் போனால் தமிழால் வணங்க முடியுமா? முடியாது. தமிழ்மொழி வழி மண நிகழ்ச்சி பிண நிகழ்ச்சி நடத்த முடியுமா? முடியாது. இப்படி எங்கும் எதிலும் தன்



படிப்பகம்

padippakam



ஏலையா 114,115,116.117

மொழியால் முடியாது என்று தமிழன் முதுகு ஒடிக்கப்பட்ட நிலையில் தன் மொழி பற்றிய தாழ்வுணர்ச்சியை நிலையாக அவன் கொள்ளத் தொடங்கிவிட்டான்.

மொழி வழியாகத் தாழ்வுணர்ச்சி ஏற்படுகிறது. அது அந்த மொழி பேசும் மனிதனையும் தாழ்வுணர்ச்சி உடையவனாகச் செய்கிறது என்பதுதான் உண்மை. தமிழர்களுள் பெரும்பாலோர் தாழ்வுணர்ச்சி நோயால் பற்றப்பட்டிருப்பதற்குத் தலைமையான காரணங்களுள் ஒன்று;

அவர்தம் தாய்மொழி தமிழ் தொடர்ந்து தலைமை இடத்து இல்லாமல் பின்னுக்கு மிக மிகப் பின்னுக்குத் தள்ளப்பட்டதாகும்.

ஒரு மொழி ஒரு புதிய இனத்திற்கு அறிமுகம் ஆகும் போது, அறிமுகம் ஆக்கப்படும் போது அஃது வெறுங் கருவி என்ற அளவில் மட்டுமே அறிமுகப்படுத்தப்படுவது இல்லை. அந்த மொழி வழி அந்த மொழிக்குரிய மக்களின் கலை, பண்பாடு, நாகரிகம் முதலானவையும் புதிதாகப் பயிலும் மக்களின் மனத்தில் ஏற்றப்படும். உலகெங்கிலும் ஆங்கில, பிரஞ்சு, ஸ்பானிஷ் (Spanish) காலனிகள் பரவியபொழுது அந்தந்த மொழிகளும் குடியிருப்பு நாடுகளில் திணிக்கப்பட்டன. மண்ணைக் கைப்பற்றும் ஆதிக்கவாதிகள் மண்ணுக்குரிய மொழியைப் படிப்பதில்லை; பேசுவதில்லை, எழுதுவதில்லை. மாறாக மண்ணின் மக்களைத் தங்கள் மொழியைப் படிக்க, எழுத, பேசப் பழக்குவித்தனர். இதன் பயன்கள் பல:

1. அந்த மண்ணின் மொழியைப் படிக்க வேண்டிய சுமை ஆதிக்க வாதிகளுக்கு இல்லாமல் போய்விட்டது.
2. புதிய மொழியைக் கற்க வேண்டிய முயற்சியும், தலைவிதியும் உள்ளூர் மக்களுக்குப் போய்ச்சேர்ந்தன.
3. தங்கள் மொழி வழித் தங்கள் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை எளிதில் குடியிருப்பு நாடுகளில் பரப்ப முடிந்தது.
4. இவற்றால் குடியிருப்பு நாட்டு மக்கள் தங்கள் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியன தாழ்வு என்று தவறாக நம்பவும், இறக்குமதிக் கலை, பண்பாடு முதலியனவற்றை எளிதாக ஏற்கவும், உயர்வாகக் கற்கவும் நேர்ந்தது.
5. ஆதிக்க மொழிக்காரர்கள் உலகெங்கிலும் தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் கலைப் பொருள்கள், உடை (முறைகள்,



படிப்பகம்

padippakam



உணவுகள், இலக்கியங்கள், நாடகம், திரைப் படங்கள், பத்திரிக்கைகள் முதலானவற்றைக் குடியிருப்பு நாடுகளில் விடுதலைக்குப் பிறகும் நிலையான விற்பனை செய்ய ஒரு நிலையான கட்டாயத்தைக் காலனிக் கால ஆட்சி மொழிப்பயிற்சி ஏற்படுத்தியது. சுருக்கமாகச் சொன்னால் காலனியிலிருந்து விடுபெற்ற நாடுகள் அரசியல் விடுதலை பெற்றுள்ளன; அவ்வளவே. அவை மொழி, பண்பாடு, கலை, நாகரிகம் ஆகியவற்றால் இன்னும் காலனி நாடுகளுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கின்றன என்பதுதான் உண்மை.

6. எனவே உலகெங்கும் ஒரு நிலையான பழக்கத்துக்கு அடிமையாகும் நுகர்வோர் சமூகத்தை (Addict consuming society) ஆதிக்க வாதிகள் தம் ஆதிக்க மொழிகளால் உண்டாக்கிக் கொள்ளுகின்றனர். இதனை ஆப்பிரிக்க, தென்னமெரிக்க, ஆசிய நாடுகளுள் ஐரோப்பாவில் உற்பத்தியாகும் சினிமா, இதழ்கள், நூல்கள், உணவுப்பொருள்கள், உடை வகைகள் இன்றும் பேராதிக்கம் செய்வதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

ஆகவே மொழியை வெறும் தொடர்புக் கருவி என்று பேசுவது குடியிருப்பு நாடுகளின் பார்வையில் பொருத்தமற்றதாகிறது. குடியிருப்பு நாட்டு மனிதனை நிலையாக முடமாக்கும் ஒரு முயற்சிதான் வேற்றுமொழிகளின் வரவும் உறவும் வாழ்வும் ஆகும். பிரஞ்சு மொழியைக் கற்பிக்கும் தொடக்க நூல்களை வெறும் பிரஞ்சு மொழிப் பயிற்சி நூல்கள் என்று அன்னோர் குறிப்பதில்லை. பதிலாக பிரான்சு மக்களின் மொழியும், நாகரிகமும் (Langue Francais et civilization) என்றே அழைப்பர். காரணம் மொழிக்கல்வியுடன் அந்த மொழி பேசும் மக்களின் நாகரிகமும் கற்பிக்கப்படும். நாணயத்தின் ஒரு பக்கம் மொழி என்றால் அதன் மறுபக்கம் பண்பாடு அல்லது நாகரிகம் என்பதுதான் பொருள். வருங்காலத்தில் ஒரு மொழி என்பதை அதன் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றுக்கு அப்பால் இருந்து கற்றுக் கொள்ளும் நிலைமை ஏற்படலாம். அது முழுக்க முழுக்க மொழியியல் என்ற அறிவியல் அறிஞர்களின் செயலாக அமையலாம். ஆனால் ஒருமொழி அரசியல் காரணங்களால் அறிமுகம் ஆகிறது என்றால் அதன்வழிக் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியன புதிதாக மொழியைக் கற்போருக்கு இலைமறை காயாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதேபொருள்.



படிப்பகம்

padippakam

தாயவள் விலங்குடைக்க தன்னுயிர் ஈமீந்திட்ட
தற்கொடையாளர் நீங்களன்றோ
தமிழீழ காவல் தெய்வம்

ஏலையா 114,115,116-117

அறிவியல், மொழியியல் வழி ஒரு மொழியைக் கற்பது வேறு; கற்பிப்பது வேறு. அரசியல் நெறிவழி ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது வேறு; கற்பிக்கச் செய்வது வேறு. தமிழ்நாட்டில் அரசியல் நெறிவழியே அயல்மொழிகள் நுழைக்கப்பட்டன; நுழைக்கப்பட்டு வருகின்றன. எனவே இந்தி கற்பிக்கப்படுகிறது என்றால் இந்தி மொழி வழி அன்னோர்க்குரிய கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியன நுழைக்கப்படுகின்றன ; நுழைக்கப்படும். ஆங்கில மொழி கற்பிக்கப்பட்டது என்றால் அதே கதிதான். ஆரியமொழியாகிய சமஸ்கிருதம் கற்பிக்கப்பட்டது என்றால் அதன் வரலாறும் இதுவேதான். இதனை இன்னும் விரிவாகத் தமிழ் நாட்டின் முந்தைய வரலாறு தொடங்கி இன்றைய வரலாறு வரை பார்ப்போம். ஒன்றை மறந்து விடலாகாது. அயல்மொழி வழிப் புதிய கலை, பண்பாடு, நாகரிகம் முதலானவை அறிமுகம் ஆகின்றன என்றால் சொந்த மொழிக்குரிய கலை, பண்பாடு, நாகரிகம் முதலானவை புதைக்கப்படுகின்றன என்பதுதான் பொருள். அதற்குச் சரியான சாட்சி தமிழ், தமிழ், தமிழேதான்.

உரோமானியர் தம் ஆட்சி, இதாலி (கி.மு. 265). வார்ரனியா (கி.மு. 227), இஸ்திரியா (கி.மு. 178), ஸ்பெயின் (கி.மு. 133), கல் (கி.மு. 50), பாகியா (கி.பி. 06) ஆகிய நாடுகளில் பரவிய போது, இலத்தீன் அந்நாடுகளில் பரப்பப்பட்டது. உள்நாட்டு மக்கள் உரோமின் ஆட்சி, அவர்தம் கலை, மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பெரியனவாக எண்ணிப் போற்றினர். இலத்தீன் எளிதாக உள் நுழைந்து செல்வாக்குப் பெற்றது. பல புதுமொழிகள் தோன்றுதற்கும் காரணமாயிற்று.

தமிழர்கள் கிரேக்க இலத்தீன் எபிரேய சீன மொழி பேசும் வணிகர்களுடன் மிகத் தொன்மையான தொடர்பு கொண்டிருந்தனர். அது ஒரு பெரும் அரசியல் தொடர்பு அன்று; மிகச் சிறு வாணிகத் தொடர்பே ஆகும். எனவே ஏற்றுமதி ஆகும் பொருள்களின் பெயர்களும், இறக்குமதி ஆகும் பொருள்களின் பெயர்களும் போயின; வந்தன; எந்த மொழியின் ஆதிக்கமும் ஏற்படவில்லை.

வடமேற்கு இந்தியாவில் நுழைந்து அங்கிருந்த திராவிட நாகரிகத்தை அழித்துப் பின்பு தென்னிந்தியாவிலும் ஊடுருவிய ஆரியர்களின் சமற்கிருத மொழி தமிழ்நாட்டில் அறிமுகம் ஆயினமை தமிழ்மொழி வரலாற்றில், தமிழர் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க மொழிப் படையெடுப்பு ஆகும்.

படிப்பகம்

padippakam



அன்று வடமேற்கு இந்தியாவில் நுழைந்த ஆரியர்தம் சமற்கிருத மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை, அவரிடம் எழுத்து வரிசையாகிய நெடுங்கணக்கு முறையும் இல்லை. எனவே எழுதும் முறையையும் எழுத்தின் வரிசை முறையையும் தமிழரிடமிருந்தே ஆரியர் கற்றனர். எனவேதான் சமற்கிருத எழுத்துகளின் உயிரெழுத்து வரிசை தமிழெழுத்து வரிசையைப் போன்றிருந்தது. சமற்கிருத எழுத்து வடிவமும் தமிழில் பழைய எழுத்து முறையான தாமிழியை ஒத்துள்ளது. ஆனால் நல்லவர்களைவிட வல்லவர்களே ஆட்சி பெறுவார்கள்; வாழ்ச்சி பெறுவார்கள் என்பது பண்டைய நாளிலும் உண்மையாக இருந்தது. வலிமை வாழ்வு பெறுவதே வரலாறு (Survival of the Strongest). ஆக ஆரியர்கள் சிறுபான்மையோர் எனினும் நல்லவர் அல்லர்; வல்லவர் என்பதால் அன்னோர் ஆளுவோராயினர். உள்நாட்டுத் திராவிட மக்கள் மாளுவோர் ஆயினர். அன்று வட இந்தியாவில் இருந்த முந்தை திராவிட மொழியுடன், திராவிட மொழிகளுடன் சமற்கிருதம் கலந்தது. ஆரியர் கிழக்காகவும் வடக்காகவும் தம் ஆதிக்கத்தை விரிவு படுத்தினர். தெற்கே விந்தியம் வரை அவர்தம் ஆட்சி விரிந்திருந்தது. இமயத்திற்கும் விந்தியத்திற்கும் இடைப்பட்ட உள்நாட்டு மொழிகள் (பிராகிருதங்கள்) சமற்கிருத உறவால் தனித்தனி வட்டார மொழிகளாகிக் காலப் போக்கில் தனித்தனி மொழிகளும் ஆயின.

அகத்தியர் வசிட்டர் காலத்திற்குப் பிறகு ஆரியர் போர் வழியிலல்ல. நேர்வழியிலும் அல்ல, ஆன்மீக வழியில் தென்னிந்தியாவிற்குள் நுழைந்தனர். ஆரிய வழிபாட்டு முறைகள் சமய நெறிகள் தமிழ் நாட்டில் பரவின. தமிழர்கள் முதலில் ஆரியக் கடவுளரின் அடியார்கள் ஆக்கப்பட்டனர். ஆரிய சமய அடியார்களாகத் தமிழர்கள் மாறிய நிலையில் சமற்கிருத மொழி தென்னிந்தியாவில் ஊற்றம் கொண்டது. கடவுளை ஒப்புக் கொண்ட நிலையில் சமற்கிருதம் கடவுள் மொழியாகத் தென்னிந்தியாவில் அறிமுகம் ஆயிற்று. திராவிடர்கள் சமற்கிருதத்தைத் தெய்வமொழி (தேவபாஷா) என்று சொல்ல வைக்கப்பட்டனர். இந்த வாய்ப்பைப் பேறாகப் பயன்படுத்திக் கொண்ட ஆரியர் சமற்கிருத மொழி வழி அவர்தம் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் புகுத்தினர். இந்த அடிப்படையில்தான் தாய் வழிச் சமூக அமைப்பு ஒழிக்கப்பட்டு, தந்தை வழிச் சமூக அமைப்பு தலைமை பெற்றது. புரோகிதர் திராவிடர்தம் அந்தப்புரம் தொடங்கி ஆட்சிப் புலம் வரை பற்றிக் கொண்டனர். சமற்கிருத மொழியைத் திராவிடமொழிச் சொற்களோடு கலந்து பேசுவது சிறப்பு, பெருமை என்று கருதப்பட வைக்கப்பட்டது (இன்று



படிப்பகம்

padippakam





தமிழுடன் ஆங்கிலம் கலந்து பேசுதல் பெருமை என்று அடிமைத் தமிழர் கருதுதல் போல). தம் தாய்மொழியுடன் மிகுதியான சமற்கிருதச் சொற்களைக் கலந்தால் அது மிகுந்த அழகு என்று எண்ண வைக்கப்பட்டது. கலப்பின் அளவு குறையக் குறைய அழகின் மதிப்பும் குறையும் என்று நம்பப்பட்டது. இந்த மனப்பான்மை பெருகியதன் விளைவாக ஆங்காங்கே இருந்த வட்டார மொழிகளைச் சமற்கிருத மொழிக்கலப்பு காலப் போக்கில் தனி மொழி ஆக்கியது.

வேற்றுமொழிக் கலப்பால் புதிய மொழி தோன்றும். பிற்காலத்து ஐரோப்பிய ஆட்சியாளர்கள் வேறுவேறு நாடுகளில் ஆதிக்கம் செலுத்தியபோது அன்னோர் மொழி உள்நாட்டில் கவுரவமாகக் கருதப்பட்டுப் புதிய மொழிகளாகத் தோன்றியதைக் காலனி வரலாறு உறுதிப்படுத்துகிறது. சான்றாக: ஐரோப்பியருக்கும் சீனருக்கும் வணிகம் பெருகியபொழுது ஆங்கில சீன மொழிக்கலப்பாலும் சிதைவாலும் புதுமொழி தோன்றியது. அது பிட்கின் (Pidgins) என்று அழைக்கப்பட்டது.* அதனைப் போலவே மேலனேசிய (Melanesia) நாடுகளில் வழங்கிய பல மொழிகளுடன் ஆதிக்கத்தில் இருந்த ஆங்கில மொழி கலக்கப் புதிய கலப்பு மொழிகள் தோன்றின. பண்டைய எகிப்தை, கிய்க்சோ (Hyksos) அசீரியர், பாரசீகர், மாக்டொனீயர், உரோமானியர் கைப்பற்றி ஆண்டனர். ஆட்சி மொழி வேறுவேறாக இருந்தது. எகிப்தியர், தம் மொழியை விடாது பேசி வந்தனர். பின்னர் அராபியர் படையெடுத்தனர்; எகிப்தை வென்றனர்; இசுலாம் மதத்தை நுழைத்தனர். முடிவில், எகிப்தியர், தம் மொழியையும் இழந்தனர்; தம் மரபு மதத்தையும் மறந்தனர்.

ஆப்பிரிக்காவிலும் வேறுபல இடங்களிலும் ஐரோப்பியக காலனி மொழிகளும், உள்நாட்டு மொழிகளும் சேர்ந்து கலந்ததன் விளைவாகக் கிரயோல் (Craole) என்ற பெயரில் புதுமொழிகள் தோன்றின. கரிபியன் (Caribbean) தீவுகளில் அமெரிக்கக் கெடுபிடியிலிருந்து தப்பிச் சென்ற நீக்ரோக்கள் கிரயோல் என்ற கலப்பு மொழியை மிகுதியாகப் பேசினார்கள்*.

வெளிப்புலத்திலிருந்து வட இந்தியா போந்த ஆரியர் பின்னர்த் தென்னகம் நோக்கிப் பரவியபோது அவர்தம் சமற்கிருத மொழிக் கலப்பால்தான் இந்திய முந்து மொழி பல மொழிகளாகச் சிதைந்தது. திராவிட முந்து மொழி கூட மலையாளம் முதலாகப் பல மொழிகளாகப் பிளவு பட்டுச் சிதறுண்டமைக்குச் சமற்கிருதக் கலப்பு பெருங் காரணமாகும். இதற்கு மிகமிகச் சரியான எடுத்துக்காட்டு மலையாளம் ஆகும். ஒரு காலத்து வட்டாரத் தமிழ்மொழி, நம்பூதிரி

padippakam



பிராமணர்தம் சமற்கிருதக் கலப்பால் கேரளத்தில் கிரயோல் ஆகிக் காலப் போக்கில் மலையாளம் என்று பெயர் படைத்தது. இன்றும் மிகுதியான சமஸ்கிருதச் சொற்களைக் கலந்து எழுதும் நடை உயர்வானதாக மலையாளிகளால் கொள்ளப்பெறுகிறது.

அதற்கென்ன? எத்தனை மொழிகள் தோன்றினாலென்ன? பல்கினால் என்ன என்று தொலை நோக்காளன் எண்ணமாட்டான். ஏனென்றால் மொழி வெறும் மொழியாக மட்டும் வரலாற்றில் நின்றுவிடுவதில்லை. மொழி வழிதான் தேசிய இனம் உருவாகும். மொழி சிதையும் பொழுது இனமும் சிதையும். இந்தியாவில் பல மொழிகள் இருப்பதால் அந்தந்த மொழிக்குத் தகத் தனித்தனி தேசியம் உருவாக நேர்ந்தது. அவ்வாறு உருவாவதே முறை. ஐரோப்பிய நாடுகளையும் அங்குள்ள மொழிவழி இனங்களையும் இன வழித் தேசியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க. எனவே ஒரு மொழி சிதையும் போது ஓர் இனம் சிதைகிறது-பிரிகிறது-பலவாகிறது. சமற்கிருதக் கலப்பால் முந்தைத் திராவிடத் தமிழ்த் தேசியம், நூற்றுக்கணக்கான மொழிவழித் தேசியங்களாகப் பிரிந்து சிதைந்தது என்பது தான் உண்மை.

இந்தோ ஈரோப்பிய மொழிக் குடும்பத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று ரொமான்சு(Romance) மொழியாகும். கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுத்திலக்கியம் எதுவும் இன்றி இருந்த இலத்தீன், கிரேக்க மொழி உறவால் இலக்கிய மொழியாயிற்று. எளிய மக்களும், படைவீரர்களும் கல்லாத அடிமைகளும் இலக்கிய இலத்தீனிலிருந்து விலகி, பேச்சு இலத்தீனைக் கொச்சை மொழியாகப் பேசி வந்தனர். இக்கொச்சை மொழியை, இழி மொழி இலத்தீன் (Vulgar Latin) என்று பழித்தனர். ஆனால், இந்தக் கொச்சை இலத்தீன் மொழிதான், உரோமானியர், வேறு நாடுகளை வென்றெடுத்த போது அங்கிருந்த உள்நாட்டு மொழிகளுடன் ஆதிக்க மொழியாகக் கலந்தது; பல புதிய மொழிகளைத் தோற்றுவித்தது. அப்புதிய மொழிகளே ரொமான்சு மொழிகள்என்றழைக்கப்படுகின்றன.

இலத்தீன் மொழி உலகெங்கும் கோயில் மொழியாகவும் ஐரோப்பாவின் இடைக்கால, பிற்கால ஆட்சிமொழியாகவும் ரொமன்சு என்ற பல ஐரோப்பிய மொழிகளுக்குத் தாய் மொழியாகவும் உருவானதற்கு மூல காரணம் அம் மொழியன்று. அம் மொழியைப் பேசிய உரோமானிய மக்களின் வீறும் வீரமுமே காரணம். உரோமப் பேரரசு கி.மு.விலும் கி.பி.யிலும் இத்தாலி, பிரான்சு, சுபெயின், போர்ச்சுகல், ரொமேனியா ஆகிய நாடுகளில் தன்



படிப்பகம்

padippakam



வெற்றிக் குடையை விரித்தது. அந்நாடுகளில் வாழ்வோர் விளங்காத மொழி பேசுவோர் என்ற கருத்தில் பார்பாரி எனப்பட்டனர். விளங்காத மொழி பேசிய மக்களின் வளமற்ற மொழிகளுடன் ரோமப் பேரரசின் கொச்சை இலத்தீன் கூடிக் கலந்தது. அந்தக் கலப்பால் உருவானது தான் ஸ்பானிஷ் மொழி.

இதனைப் போலவே ஆரியர்தம் ஆதிக்க வரவால் சமற்கிருத மொழி இந்தியாவில் வழங்கப்பட்ட உள்நாட்டு மொழிகளோடு கூடிக் கலந்து புதிய மொழிகள் உருவாயின. அதாவது அந்தந்த வட்டாரத்தில் பேசப்பட்ட பழைய மொழிகள் அழிந்தன என்று பொருள். இதனை வட இந்தியாவில் மிகுதியாகப் பேசப்படும் இந்தி மொழியின் அமைப்பும் வற்புறுத்துகிறது. ஆரியர் இந்தியாவிற்கு வந்து குடியேறிய போது திராவிடர்களுடன் கலந்து வாழ்ந்தனர். கலப்பால் ஆரிய மொழியும் திராவிட மொழியும் கலந்து பலவகை திரிபுற்ற மொழிகள் ஏற்பட்டன. வட இந்திய மொழிகள் எல்லாவற்றிலும், வடமொழிக் கூறுகளுடன் பிறமொழிக் கூறுகளும் உள்ளன. அப்பிறமொழிகள் திராவிட மொழிக் கூட்டுறவால் அமைந்தன என்பர் அறிஞர்.[2] வட இந்தியாவில் இருந்த உள்நாட்டு மொழிகள் சமற்கிருதக் கலப்பால் பல புதிய மொழிகளாகக் கிளைத்தமை போன்றே பிற்காலத்துச் சமற்கிருத மொழி தென்னிந்தியத் திராவிட மொழிகளுடன் கலந்து அம்மொழிகளைத் திராவிடச் சார்பு உடையன ஆக்கின. அதிலிருந்து தப்பி நின்ற மொழி தமிழ் ஒன்றே ஆகும்.

ஆரிய மொழிக் கலப்பு வெறும் மொழிக் கலப்பாக நில்லாமல் கலை, பண்பாடு, நாகரிகக் கலப்பு உடையதாக மாறும் வாய்ப்பு நேர்ந்ததால் தமிழ் நாட்டுக் கலை, பண்பாடு, நாகரிகங்கள் அழியும்; அவற்றுடன் கூடத் தமிழ் மொழியும் அழிந்துவிடும் என்ற முறையான அச்சம் தமிழ் முன்னோர்க்கு இருந்தது. இந்த அச்சம் மிகமிக உண்மையானது என்பதை உலக மொழி வரலாற்றை அறிந்தவர்கள் உணர்வார்கள். முற்காலத்து உரோமானியர்தம் படையெடுப்பாலும், பரவுதலாலும் ஐரோப்பாவில் இருந்த பல மொழிகள் திரிந்தன; சில மொழிகள் அழிந்தன. அவ்வவ்விடங்களில் இலத்தீனும் அதன் கொச்சை வடிவமான உரோமான்சு மொழிகளும் குடியேறின. உரோம மொழியுடன் மட்டுமன்றி உரோமரின் கலை, பண்பாடு, நாகரிக ஆதிக்கம் அங்கங்கே பரவின.

பிற்காலத்து ஆங்கிலேயர்தம் குடியிருப்பு ஆப்பிரிக்க, ஆசிய, வட அமெரிக்க, ஆஸ்திரேலியக் கண்டங்களில் பரவியது. ஆங்கில மொழி



படிப்பகம்

padippakam



பரவுதல் வட அமெரிக்காவில் சிவப்பு இந்தியர்கள் பேசுகின்ற மொழிகளைச் சில இடங்களில் சிறுபான்மை மொழியாக்கியது. பல இடங்களில் அழுத்தியே விட்டது. இன்னும் பல இடங்களில் உள்நாட்டு மொழிகள் வளர முடியாத அளவுக்குப் பெருந்தடைச் சுவராக நின்றது. ஆஸ்திரேலியாவிலும் அந்நாட்டுப் பழங்குடிகள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். பழங்குடி மக்களும் அவர்தம் மொழிகளும் ஆஸ்திரேலியப் பாலை வனப் பகுதிகளுக்கும் காட்டுப்பகுதிகளுக்கும் விரட்டப்பட்டனர். ஆங்கிலம் மட்டுமன்று வட அமெரிக்க தென் அமெரிக்கப் பகுதிகளில் பரவிய சுபானிசு மொழி உள்நாட்டுச் சிவப்பு இந்தியர் மொழியை ஒழித்தது. அண்மையில் பொதுவுடைமை நாடாக மலர்ந்துள்ள நிகராகுவா சிவப்பிந்தியரின் நாடாகும். இங்குள்ள சிவப்பிந்தியர் சுபானிசு குடியேற்றத்தால் நிலை குலைந்தனர். அவ் ஆதிக்குடிகள் கிட்டத்தட்ட ஒழிக்கப்பட்டனர். அவர்களும் வெறும் நான்கு விழுக்காடாகச் சிறுத்தனர். சுபானிசு வெள்ளைக் காரர்களுக்கும் மெசுடிசா (Mestiza) என்ற உள்நாட்டுச் சிவப்பிந்தியக் குடிகளுக்கும் கலந்து பிறந்த கலப்பின மக்கள் 96 விழுக்காடாயினர். ஆக மொழியும் போயிற்று. மக்களும் மாய்ந்தனர். உலகின் தெற்குக் கோடியில், பசிபிக் பெருங்கடலில் ஈஸ்டர் தீவு உள்ளது. இங்கே இராப்பனி(Rapanui) என்ற பண்டைக் குடியினர் வாழ்ந்தனர். தீவைக் கண்டு பிடித்த ஐரோப்பியர் தீவு மக்களை ஒட்டு மொத்தமாகக் கொன்றனர். வெறும் இரண்டாயிரம் பேரே எஞ்சினர்*.

கரிபியன் தீவுகள் சுபானிசுக் குடியிருப்பாக மாறின. கி.பி. 1600-இல் ஸ்பானிஷ் காரர்களுடன் ஆங்கிலேயரும், பிரஞ்சுக் காரரும் குடியேறினர். உள்நாட்டு மக்கள் ஒடுக்கப்பட்டனர். அத்தீவுகளில் இருந்த காரிப் மொழியும், அரவாக்கன் (Arawaken) மொழியும் அழிந்தன. சமைய்க்கா (Jamaica) என்றொரு சிவப்பிந்தியத் தீவு. அங்குள்ள மக்களின் மொத்த தொகை 1,613,880. இவர்களுள் 1,453,660 நீக்ரோக்கள். 18000 பேர் ஐரோப்பியர். ஆப்பிரிக்கர் தம் மொழியை மறக்க ஆங்கில மொழி அரசோச்சுகிறது. போர்ட்டரிக்கோ (Port-Rica) என்றொரு நாடு. இங்கு அரவாக்கன் மொழி பேசப்பட்டது. இன்றோ ஸ்பானிசும் ஆங்கில மொழியும் ஆட்சி செலுத்துகின்றன. மக்களின் சொந்த மொழியான அரவாக்கன் மொழி அழிந்தது. இப்படி ஆட்சிப்பீடத்தில் இருப்போர் மொழியாக அறிமுகமாகும் மொழிகள் உள்நாட்டு மொழிகளைச் சாகும் மொழிகளாக ஆக்கி விடுவது உண்மை. எனவேதான் விழிப்புள்ள இன மக்கள் வேற்று மொழியின் ஆதிக்கத்தை வேர்விடும் நிலையிலேயே தாக்க வேண்டி உள்ளது. கி.பி. 17ஆம்



படிப்பகம்

padippakam



நூற்றாண்டில் போர்த்துகல்லும் பிரான்சும் சேர்ந்து ஸ்பெயினை எதிர்த்துப் போரிட்டன. போரின் முடிவில் பிரஞ்சுப் போர்வீரர்களும் அரசியல் வாதிகளும் போர்ச்சுக்கல் நாட்டில் தங்கினர். இதன் விளைவாகப் பிரஞ்சு மொழி போர்த்துக்கல் மொழிமீது ஆதிக்கம் செய்யத் தொடங்கியது. ஆனால் போர்த்துக்கீசிய அறிஞர்கள் இதனை விரும்பவில்லை. எதிர்த்தார்கள். அதனால் போர்த்துக்கீசிய மொழியின் தூய்மை ஓரளவு காப்பாற்றப் பட்டது.*

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்துப் பள்ளிகளில் கிரேக்க மொழியும் இலத்தீன் மொழியும் பயிற்றுவிக்கப்பட்டன. இலத்தீன் மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் பேசக் கூடாது என்று விதி இருந்தது. இவ்விதியை மீறும் மாணாக்கர் சாட்டையால் அடிக்கப்பட்டனர். ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பைபிளைப் படிப்பதற்குத் தடை இருந்தது. இலத்தீன் மொழியில்தான் பைபிளைப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. கோயில்கள் அனைத்திலும் இலத்தீன் மொழியே கோலோச்சியது. நாடாளுமன்றத்திலும் பொதுவிடங்களிலும் பிரஞ்சு மொழியில் பேசுவதே மதிப்பு என்று கருதப்பட்டது.

அக்கால இங்கிலாந்தில் பேராதிக்கம் செலுத்தி வந்த இலத்தீனையும் அதற்கு அடுத்தபடியாக இருந்த பிரஞ்சு மொழியையும் தொடர்ந்து விட்டு வைக்கவில்லை சொரணையுடைய ஆங்கிலேயர். எட்டாம் என்றி காலத்தில் சமுதாயத்தில் ஒரு புரட்சியே உண்டாக்கப்பட்டது. ஆங்கில மொழியில் பைபிள் படிப்பது கட்டாயமாக்கப்பட்டது. இலத்தீன் மொழியில் மாதா கோயில்களில் வழிபாடு நடத்தப்பட்டதற்குப் பதிலாக ஆங்கில மொழியில் வழிபாடு நடத்தப்படவேண்டும். ஆங்கில வழிபாட்டுப் புத்தகத்தையே கிறித்துவக் கோயில்களில் பயன்படுத்த வேண்டும் என்று கட்டளை இட்டார் எலிசபெத் அரசி. 200 சாமியார்களுக்கு இலத்தீன் மொழியை விட்டு விட்டு ஆங்கில மொழியில் வழிபாடு நடத்தத் தெரியவில்லை. அத்தனைப் பேரும் சாமியார் பொறுப்பிலிருந்து உடனே விலக்கப்பட்டனர். எஞ்சிய அனைத்துச் சாமியாரும் அரசியின் ஆங்கில வழிபாட்டு ஆணைக்கு அடிபணிந்தனர். பிரான்சிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் இங்கிலாந்து மாதா கோயில்களில் சாமியாராக அமர்த்துவது முற்றுமாக நிறுத்தப்பட்டது. எல்லாருக்கும் விளங்கும் படியான எளிய ஆங்கிலத்தில் எல்லாம் எழுதப்பட்டன.



படிப்பகம்

padippakam

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் -அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு



# இலக்கியமும் உளவியலும்

சி. இ. மறைமலை

ஆங்கிலக் கல்வியின் பயனாக, இக்கால இலக்கியங்களில் உளவியலின் தாக்கம் - குறிப்பாக பிராய்டியத்தின் தாக்கம்-ஓரளவு காணப்படுகின்றது. 'பிராய்டியத்தின் தாக்கம்' என்ற போர்வையில் வரம்பிகந்த பாலுணர்வை வாரி வழங்கும் வள்ளல்களாக நம் எழுத்தாளர்கள் செயற்பட்டு வருகிறார்கள். ஆய்வுலக 'இரட்டைப் புலவர்கள்' சிட்டி, சிவபாதசுந்தரம் வருத்தத்துடனும் பொறுப்புணர்வுடனும் இதனைச் சுட்டிக் காட்டுகின்றனர்:

''சமீப காலமாக தமிழ் நாவல்களில் பாலுணர்ச்சியும் அந்த உணர்ச்சியின் அடிப்படைகளை விளக்கும் உளவியற் பகுப்பாய்வு முறையும் சிலரால் அதிகமாகக் கையாளப்படுவதைப் பார்க்கிறோம். ஒரு பெண்ணின் அங்க அமைப்பு மட்டுந்தான் பாலுணர்ச்சியின் வெளியீடு என்ற தப்பான எண்ணம், முதிர்ச்சியடையாத சில எழுத்தாளர்களிடையே நிலவுகிறது. இந்த உணர்ச்சியைப் பற்றியும், ஆண் பெண் உடலுறவு பற்றியும், சாதாரணமாய் வழங்கப்படாத சொற்களை பிரயோகித்து வருணித்து விடுவது ஓர் இலக்கியப் புர : சியென்றும் இவர்கள் நினைக்கிறார்கள். தமிழில் சிந்தாமணி, இராமாயணம் முதலிய காவியங்களிலும், கூளப்ப நாயக்கன் காதல், விறலி விடுதூது போன்ற பிற்காலப் பிரபந்தங்களிலும் காணப்படும்



படிப்பகம்

padippakam





வர்ணனைகளைவிட இன்றைய துணிச்சலான எழுத்தாளர்கள் இந்த அகத்துறையில் புதிதாகவோ புரட்சிகரமாகவோ ஒன்றையும் சாதித்து விடவில்லை. இவ்வகையில் மேனாட்டு எழுத்தாளர் சிலரைப் பின்பற்றி ஏதோ புதுமையைப் புகுத்திவிட்டதாக இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஃப்ராய்டும் (Freud) யூங்கும் (Jung) எடுத்துச் சொன்ன விஞ்ஞான ரீதியான முடிவுகளை மேல்நாட்டு நிபுணர்களே முற்றிலும் விளங்கிக் கொள்ளாத நிலையில் நமது நாவலாசிரியர்கள் உணர்ந்து விட்டார்கள் என்பது ஆச்சரியம் தான்".

(தமிழ்நாவல்: ப. 214-215)

சிட்டி, சிவபாதசுந்தரம் உணர்த்தும் உண்மை கசப்பானதாக இருந்தாலும் நம் எழுத்தாளர்கள் இவ்வுண்மையை உணர்ந்து தமது படைப்பு முயற்சிகளை நெறிப்படுத்திக் கொள்வரேயாயின் தரமான படைப்புகளை எதிர்பார்க்கலாம். பிராய்டியப் போர்வையில் பாலுணர்வைக் கொச்சைப்படுத்தி எழுதுவதால் விற்பனை பெருகலாம்; ஆனால் எழுத்தின் தரம் குறைந்துவிடும். பிராய்டியக் கோட்பாடுகளைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டு, உள்வாங்கிக் கொண்டு, தமது கற்பனைக்கும் கதையமைப்பிற்கும் ஏற்பப் பயன்படுத்தினால், தமது படைப்புகளையே தரமிக்க உளவியல் ஆய்வுகளாகவும் வெளிப்படுத்தும் வன்மை பெறலாம் என்பதனை எழுத்தாளர்கள் உணர வேண்டும்.

புனைகதையிலும் புதுக்கவிதையிலும் உளவியலின் தாக்கம் பற்றிப் பின்னர் ஆயலாம். பிராய்டியக் கோட்பாடு பற்றிய ஓர் அறிமுகத்தை அடுத்த இயலில் காண்போம்.

உளவியற் பகுப்பாய்வு (Psychoanalysis) ஒரு முற்று கைவிடப்பட்ட கோட்டையாகவே, மிகுதியும் அச்சுறுத்தப்பட்ட அறிவியலாகவே அதன் தொடக்கக் காலத்திலிருந்து விளங்கி வருகிறது. இதுகாறும் சமூகத்தால் போற்றப்பட்டு வந்த, மக்கள் உள்ளத்தில் ஆழப்பதிந்துள்ள, நம்பிக்கை



படிப்பகம்

padippakam



களை அது எதிர்ப்பதனால் அது எதிர்க்கப்பட்டு வருகின்றது. கோப்பர் நிகசு, டார்வின் ஆகியோர் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்ததைப் போலவே பிராய்டும் கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்தது.

பிராய்டின் உளவியல், அடிமனநிலை அல்லது மனமறியா நிலை (The unconscious) என்பதில் கொண்டுள்ள நம்பிக்கையையே தனது அடித்தளமாகக் கொண்டுள்ளது. பிராய்டின் சொற்களில் கூறுவதானால், மனமறியா நிலை (The unconscious) என்பது உளவியற் பகுப்பாய்வாளன் ஏற்றொழுகும் மூடநம்பிக்கை ஆகும்.

தற்கால உளவியலில், மனித உள்ளத்தின் அடிமனக் கூறுகளைப் பற்றி வலியுறுத்திய அவரது அழுத்தம் திருத்தமான கோட்பாடுகள், பிராய்டின் பங்களிப்பு ஆகும். அவரது மனநோயாளிகள் பற்றிய ஆய்வுக் குறிப்பேடுகளிலிருந்து தக்க சான்றுகளை அளித்து நம்முடைய பெரும்பாலான நடவடிக்கைகள் நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட மன ஆற்றல்களால் இயக்கப்படுவன என்று பிராய்டு தெரிவித்தார்.

நீரில் மிதக்கும் ஒரு பனிக்கட்டியைப் போல மனித உள்ளத்தின் கனமும் அடர்த்தியும் அதன் வெளிப்பரப்புக்கு அடியில் அமைந்துள்ளது அல்லது அதனுடைய நனவு நிலைக்கு அடியில் அமைந்துள்ளது. பிராய்டு நனவு நிலை மனத்திற்கும் அடிமனத்தின் செயற்பாங்குக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கூறுகிறார்.

(New Introductory lectures on psychoanalysis - Norton 1964)

அடிமனம் என்ற சொல்லுக்குப் பழைய முறையில் விளக்கம் அளித்தால் "நாம் ஊகித்தே அறியக் கூடிய மனநடவடிக்கைகளை (அடிமனத்தின் விளைவுகளைக் கொண்டு அறியக் கூடிய மனநடவடிக்கைகளை) அடிமனம் என்று கூறுகிறோம்" எனலாம். நாம் அதனை நேரடியாக அறிய முடியாததால் அடிமனம் என்கிறோம்:



படிப்பகம்

padippakam

தாயவள் விலங்குடைக்க தன்னுயிர் ஈய்ந்திட்ட
தற்கொடையாளர் நீங்களன்றோ
தமிழீழ காவல் தெய்வம்

ஏலையா 114,115,116,117

இன்னும் தெளிவாக வேண்டுமானால் இந்த வரையறையை மாற்றியமைத்து வேறு விதமாகக் கூறலாம். "அடிமன நிலை என்று நம்மால் அழைக்கப்படுவது ஒரு குறிப்பிட்ட காலத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த - அந்த நேரத்தில் நாம் கொஞ்சம் கூட அறிந்திராத-மனநிலையே ஆகும்" எனலாம்.

பிராய்டு அடிமனத்தின் இன்றியமையாமையை மேலும் வலியுறுத்துகிறார். 'பெரும்பான்மையான நனவு நிலைச் செயல்கள் ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கே நனவு நிலையாக விளங்குகின்றன, அதன்பின் அவை உள்ளுறைந்து விடுகின்றன, ஆனாலும் அவை மீண்டும் எளிமையாக நனவு நிலையாகி விடுகின்றன" என்கிறார். எனவே பிராய்டு இருவகையான அடிமனம் அலலது மனமறியா நிலைகளைக் குறிப்பிடுகிறார்.

முதல்வகை, அடிக்கடி எழும் சூழ்நிலைகளால் நனவு நிலைப் பொருளாக மாற்றக் கூடிய வகையில் அமைவது. மாணவர்களிடம் பாடம் தொடர்பான வினாக்களை எழுப்பினால் சில நேரங்களில் "விடை தெரிந்துள்ளது. ஆனால உடனே செல்ல முடியவில்லை" என்கின்றனர். இதனையே சிலர் விடை தமது தொண்டைவரை வந்து விட்டதாகவும் சற்று முயன்றால் வாய்க்கு வந்துவிடும் என்றும் கற்பிதமாகக் கூறுகின்றனர். இந்நிலையை நனவுநிலைக்கு முந்தியது (Pre-Conscious) என்பர். உடனடியாக நனவு நிலைக்குக் கொணர முடியாவிட்டாலும்; இடைவிடாது முயன்று நனவுநிலைக்குக் கொண்டு வந்து விடக் கூடிய நிலை இங்ஙனம் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டாம் வகை, நனவு நிலைப் பொருளாக மாற்றுதற்கே இடமளிக்காத வகையில் உள்ளுறைந்து விடுவது. இதனையே மனமறியாத நிலை அல்லது நனவிலி நிலை (Un-Conscious) என்கிறோம், நம்முடைய மனப் போக்கில் பெரும்பான்மையானவை மனமறியாத நிலையில் உள்ளன என்பது பிராய்டின் இன்றியமையாத முதன்மைக் கோட்பாடாகும்.




படிப்பகம்

padippakam



மனிதனுடைய நடத்தைகள் அனைத்தும் பாலுணர்வினாலே உந்தப்படுகின்றன என்பது அவரது இரண்டாவது கோட்பாடாகும். உள்ளத்தின் முதன்மையான ஆற்றல் லிபிடோ என்னும் பாலுணர்வு இயல்பூக்கமாகும் என்றார் பிராய்டு. இந்த இரண்டு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இன்னும் பல்வேறு துணைக் கோட்பாடுகளை பிராய்டு உருவாக்கியுள்ளார்.

பிராய்டு மனத்தின் செயல்முறைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறார். ஈடு என்னும் தூண்டல் ஆற்றல், ஈகோ என்னும் தன் முனைப்பு அல்லது 'தான்' என்னும் அகங்காரம், சூப்பர் ஈகோ என்னும் மனச்சான்று என்பவையே அம்மூன்று பகுதிகளாகும். இதனை ஒரு படத்தின் மூலம் விளக்குகிறார்.






படிப்பகம்

padippakam





ஈட் (Id) — தூண்டல் ஆற்றல்

ஈகோ (Ego) — தன்முனைப்பு

சூப்பர் ஈகோ (Super-Ego)—

மனச்சான்று—

முதலாவதாக, இந்தப் படம், மனித மனக்கிடங்கில் மனமறியாத நிலை என்னும் அடிமனம் எத்துணைப் பெரும் பரப்பை உள்ளடக்கியது என்பதைக் காட்டுகிறது. இரண்டாவதாக, ஈகோ என்னும் தன் முனைப்பு. ஈடு என்னும் தூண்டல், சூப்பர் ஈகோ என்னும் மனச்சான்று ஆகிய மூன்றுக்குமிடையே அமைந்துள்ள உறவுமுறையைப் படம் எடுத்துக் காட்டுகின்றது. அடுத்ததாக, நனவுநிலைக்கும் மனமறியாத நிலைக்கும் இடையிலே அமைந்துள்ள பிணைப்பை இப்படம் காட்டுகின்றது. ஈடுஎன்னும் தூண்டலாற்றல் முழுக்க முழுக்க மனமறியாத நிலைக்கு உட்பட்டு இருத்தல் கவனிக்கத் தக்கது, தன் முனைப்பும் மனச்சான்றும் நனவு நிலையின் பகுதிகளாக விளங்குகின்றன.

இப்படத்தை ஒரு வழிகாட்டியாகக் கொண்டு இந்த மூன்று மனப்பகுதிகளின் தன்மைகளையும் இயல்பையும் காண்போம்.

ஈடு என்னும் தூண்டல் ஆற்றல் லிபிடோ என்னும் இன்ப இயல்பூக்கத்தின் கொள்கலமாகத் திகழ்கிறது. இந்த இன்ப இயல்பூக்கமே உள்ளத்தின் ஆற்றலுக்கெல்லாம் முதன்மையான தோற்றுவாயாக விளங்குகின்றது. வாழ்க்கையின் முதன்மைக் கோட்பாடாகிய இன்ப நிலைக் கோட்பாட்டை நிறைவேற்றுவதற்கு லிபிடோ என்னும் இன்பவியல்பூக்கம் காரணமாக விளங்குகிறது.

நனவு நிலையின் தொடர்பு இல்லாமலேயே, பகுத்தறிவின் இயைபு இல்லாமலேயே ஈடு என்பது மிகப் பெரிய ஆற்றல் பெற்றிருக்கிறது. நம்முடைய ஆளுமையின்



படிப்பகம்

padippakam



புரிந்துகொள்ள முடியாத இந்தக் குழப்பமான பகுதியை, அதிர்ச்சியூட்டும் உணர்ச்சியின் உறைவிடமாகவும், ஒருமித்த மனவுறுதி பெறாத, எத்தகைய அமைப்புமற்ற இன்ப நிலைக் கோட்பாட்டுக்கு இயைய இயல்பூக்கங்களின் தேவைகளுக்கு நிறைவு தேடுகின்ற ஒரு தூண்டலாகவுமே பிராய்டு விளக்குகின்றார். தருக்கவியலின் விதிமுறைகள்-எலலாவற்றுக்கும் மேலாக முரண்பாடு குறித்த விதிமுறைகள் - ஈடைப் பொறுத்தவரை அதனுடைய செயல்முறைகளுக்குப் பொருந்தி வாரா. ஒன்றுக்கொன்று முரண்பட்ட நாட்டங்கள் ஒன்றையொன்று தணிவிக்காமலோ ஒன்றின் மேல் ஒன்று மேலாண்மை செலுத்தாமலோ தனித்தனியே இடம் பெற்றிருக்கும். இயல்பாகவே ஈடுக்கு நன்மை, தீமை, அறம், பாவம், மதிக்கத்தக்கன, மதிக்கத் தாகாதன என்ற வேறுபாடு கிடையாது.

சுருக்கமாகச் சொன்னால் ஈடு நம்முடைய விருப்பங்களுக்கும், நம்மை ஆட்படுத்தும் உணர்வுகளுக்கும் ஊற்றாக, தோற்றுவாயாக விளங்குகிறது. எத்தகைய சட்டத்திற்கும் கட்டுப்படாததாகவும் சமூகக் கட்டமைப்பிற்கு இயைந்து செல்லாமலும் அறநெறியைப் பொருட்படுத்தாமலும் விளங்குவது ஈடு என்னும் தூண்டல் ஆற்றலின் தன்மை ஆகும்.

நம்முடைய இன்ப இயல் பூக்கங்களுக்கு நிறைவு அளித்தலே ஈடின் செயலாக விளங்குகிறது. அங்ஙனம் நிறைவு அளிக்கும் போது சமூக மரபுகளையோ சட்டவிதி முறைகளையோ அறநெறிகளையோ பற்றி ஈடு கவலைப் படுவதில்லை. இதற்குரிய கட்டுப்பாடு விதிக்கப்படாவிடில் -அது இன்பநாட்டத்திற்காக-அழிவுக்கு, சுய அழிவுக்கே காரணமாக விளங்கிவிடும்.

தன்னுடைய தற்காப்பும் அடுத்தவர்களின் நலனும் ஈடு என்னும் தூண்டலுக்கு ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை. அதனுடைய நோக்கமெல்லாம் விளைவுகளைப் பற்றிக்



படிப்பகம்

padippakam



கவலைப்படாமல் இன்பவியல்பூக்கத்தை நிறைவுபடுத்தலே யாகும்.

பிராய்டுக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னால், இந்த ஆற்றல் மனிதனிடம் அமைந்திருத்தல் கண்டுபிடிக்கப் பட்டிருந்தது. ஆனால் அதற்குக் காரணமாக இயற்கை இறந்த ஆற்றல்ளையும் புறஆற்றல்களையுமே கருதி வந்தனர். பிராய்டின் வரையறைப்படி, ஈடு, சமயவாதிகளால் வரையறுக்கப்பட்ட தீய ஆற்றல் (Devil) என்பதை ஒத்தே அமைந்திருந்தது.

குறும்புக்காரக் குழந்தையை முழுக்க முழுக்க பிசாசின் வயப்பட்டதாகக் கூறும் மரபுவழக்கு உளவியலின்படி சரியானது எனலாம். ஏனெனில் அக் குழந்தையின் ஈடு என்னும் தூண்டல் ஆற்றல் தன் முனைப்பாலோ மனச் சான்றாலோ கட்டுப்படுத்தப்படாத நிலையில் இருந்தது. சிறு குழந்தைகள், சிலசமயம் மனக்கோளாறுடைய முதியோர் ஆகியோரிடம் அமைந்திருக்கும் கட்டுப்படுத்தப் படாத இன்ப நாட்டங்கள், அதிகமாக அவர்களுக்குத் தொல்லை பயப்பதையும் சில சமயங்களில் ஊறு பயப்பதையும் காணலாம்.


ஈடினுடைய அஞ்சத்தக்க ஆற்றல்களைக் காணும் போது ஏனைய மன ஆற்றல்கள் செயற்பட்டு அதனைக் கட்டுப்படுத்தினாலே சமுதாயத்தின் நலனும் தனிமனிதனின் நலமும் காக்கப்படும் என்பது தெளிவு. இங்ஙனம் கட்டுப்படுத்துகின்ற ஆற்றல்களில் முதன்மையானது ஈகோ என்னும் தன்முனைப்பாகும்.

ஈகோ மனிதன் தன்னைத் தற்காத்துக் கொள்ள உதவுகிறது, மன ஆற்றலின் பகுத்தறிவுக் கூறாக ஈகோ விளங்குகிறது. ஈடு என்னும் இன்பவியல்பூக்கம் ஓயாது செயற்பட்டுக் கொண்டிருத்தலைப் போல ஈகோ உறுதியான நிலைத்த உயிர்ப்பைப் பெற்று விளங்கவில்லை.



படிப்பகம்

padippakam



ஆக்கங்களுக்கு
ஆக்கதாரர்களே
பொறுப்பு. ஆக்கங்களைத்
திருத்தவோ, மறுபரிசீலனை
செய்யவோ, நிராகரிக்கவோ
ஆசிரியருக்கு உரிமையுண்டு.

ஆக்கபூர்வமான
விமர்சனங்களை எதிர்பார்க்
கின்றோம்.

ஆக்கங்களை அனுப்புவதற்கும்
இவ்விதழ் சம்பந்தமான
தொடர்புகளுக்கும் தொடர்பு
கொள்ள வேண்டிய
முகவரி

K.K.Murugathaasan
Bromberger Str.8
46145 Oberhausen
Tele:0208 607635

## சமர்ப்பணம்


தமிழ் இனத்திற்காகவும்;
தமிழ்மொழியின் வளர்ச்
சிக்காகவும் தங்களையே
அர்ப்பணித்த
தகைசான்றோர்க்கும்
எம்மண்ணின்
விடுதலைக்காக
தங்களையே
அர்ப்பணித்துக்
கொண்டிருக்கும்
தியாக தீபங்களாகிய
எங்கள் அன்பிற்குரிய
மாவீரர்களுக்கும்;
எம்மக்களுக்கும்
இவ்விதழை இதய
அஞ்சலியுடன்
சமர்ப்பிக்கின்றோம்.

இவ்விதழ் நூலுருப்பெற
உதவி புரிகின்ற
கரிதாஸ் அமைப்புக்கும்
டியகோனி அமைப்புக்கும்
நன்றிகள்

Für die freundliche
Unterstützung bei der
Herstellung dieses Heftes
danken wir dem Caritasverband
und dem Diakonisches Werk


வெளியீடு
ஒபகௌசன் தமிழர் ஒன்றியம்

இது ஒரு
இலவச வெளியீடு
இவ்விதழை
மற்றவர்களுக்கும்
கொடுத்து உதவுங்கள்



படிப்பகம்

114,115,116,117




ஒருவர்

தீர்வுப் பொதியினுள் ஒன்றுமே காண வில்லையே?

மற்றவர்

ஒன்றுமில்லாத ஒன்று சூடிப் பெயர்தான் தீர்வுப் பொதி.



தீர்வுப் பொதியின் வெட்டுமுகத் தோற்றம்



VISJP.

ஒபகௌசன் தமிழர் ஒன்றியம்

VEREIN DER TAMILEN IN OBERHAUSEN